மலர்-5 இதழ்-109 மார்ச் 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

www.aanmeegamalar.com

# சிவன் லிங்க வடிவெடுத்த நாளே

# மகாசிவராத்திரி

# நன்மை தரும் உபயதோமுகி தரிசனம்



பசு பிரசவிக்கும்போது கன்றின் தலைதான் முதலில் வரும்.

இந்த நிலையில், இரண்டு தலைகள் கொண்ட பசுவை பார்ப்பதுபோல் இருக்கும்.

அதாவது முன்பக்கமும், பின்பக்கமும் தலைகள் இருப்பது போல் காணலாம்.

பசு இப்படிக் காட்சி தருவதை 'உபயதோமுகி' என்பர்.

இந்தக் காட்சியை தரிசிப்பது மஹா புண்ணியம்.

இந்த தருணத்தில், பசுவை வலம் வந்து நமஸ்கரிப்பதால் நமது சகல பாவங்களும் நீங்குவதுடன், ஈரேழு பதினான்கு உலகங்களிலும் உள்ள சகல தேவதைகளையும் தரிசித்த புண்ணியம் கிடைக்கும்.

# சிவனுக்கும் நந்திக்கும் இடையில் செல்லக்கூடாது

சிவாலயங்களில் கர்ப்பக்கிரகத்திற்குஎதிரில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் நந்தி தேவர் தரும விடை எனப்படுவார். அழிவே இல்லாதது தருமம். அது விடை (ரிஷபம்) வடிவில் இறை வனிடத்தில் சென்றடைய, அந்த நந்தியின் மீது ஈஸ்வரன் அமர்ந்திருக்கிறார். தருமம் இறைவனைத் தாங்குகிறது. அதுவிடும் மூச்சுக்காற்றுதான் இவருக்கு உயிர்நிலை தருகிறது. இதனால்தான் மூலவரின் தொப்புள் பகுதியை உயிர் நிலையாகக் கொண்டு, அதன் நேர்க்கோட்டில் நந்தியின் நாசி அமையுமாறு அமைக்கப்படுகிறது.



இம்மூச்சு தடையேது மின்றி மூலவரைச் சென்றடையத் தான் நந்தியின் குறுக்கே போவதும் விழுந்து வணங்குவதும் கூடாது என்பது வழக்கத்தில் இருக்கிறது.

# வில்வ இலைகளை பயன்படுத்தும்போது

வாழ்வில் செல்வம், வெற்றி ஆகியவற்றை பெற விரும்புவோர் அவசியம் சிவராத்திரி விரதம் இருக்க வேண்டும்.

சிவனுக்கு வில்வ அர்ச்சனை செய்யும் போது, அதன் பின்பக்க நரம்பு மூர்த்தியின்மேல்படும்படிபோட வேண்டும். அந்தப் பக்கம்தான் லட்சுமி வாசம்செய்கிறாள். ஒற்றைப்படை இதழ்களைக் கொண்ட வில்வம் அர்ச்சனைக்கு மிகவும் நல்லது.



- ஆதிசங்கரர் முக்தி லிங்கத்தை ஸ்தாபித்த திருத்தலம் கேதார்நாத்.
- மூங்கிலை தலவிருட்சமாகக்கொண்ட சிவத்தலங் கள். திருநெல்வேலி, திருவெண் ணெய்நல்லூர்.
- சிவபெருமானை ஆடு பூஜித்த தலம், திருவாடானை.

www.aanmeegamalar.com

# செவ்வாய்கிழமையும் அங்காரக விரதமும்

வருவாய் அதிகரிக்க வேண்டுமானால் செவ்வாய்க்கிழமை விரதம் இருக்க வேண்டும் என்று முன்னோர்கள் சொல்வார்கள். வாரத்தின் ஏழு நாட்களில் மூன்றாவது நாளாக இடம் பிடிப் பது செவ்வாய்க்கிழமை. அன்றைய தினம் அங்காரகனுக்கு முக்கியத்துவம் உகந்த நாளாகும்.

தங்குதடை இல்லாத வாழ்க்கையும்,தன்னிகரில்லாத அளவு புகழும், மங்கல வாய்ப்புகளையும், மாபெரும் சக்தியை யும் பொங்கிவரும் உள்ளத்தில் தன்னம் பிக்கையையும், பொருளாதார நிறைவையும் வழங்குவது அங்காரகன்தான். அந்த அங்காரகனுக்குரிய தெய்வமாக விளங்குவது முருகப் பெருமான் மற்றும் சக்தி தேவி.

முருகப்பெருமான், சக்தி தேவி, அம்பிகைக்கு உகந்த நாளான செவ்வாய்க்கிழமை இந்த தெய்வங்களை வணங்கினால் கவலைகள் அகலும். செந்நிற ஆடை அணிந்து வழிபாட்டில் பங்கேற் பது; நைவேத்தியமாக செந்நிற கனி வைத்து தீபாராதனை செய்ய வேண்டும்.

கார்த்திகை நட்சத்திரம் அல்லது விசாக நட்சத்திரம் அல்லது விசாக நட்சத் திரம் அமைந்த செவ்வாய்க் கிழமை விரதத்திற்கு பலன் அதிகம் உண்டு.

வீட்டு பூஜையறையின் நடுவில் வேல் வைத்து இருபுறமும் இரு விளக்குகள் வைத்து ஒரு விளக்கில் மூன்று திரிகளும், மற் றொரு விளக்கில் மூன்று திரிகளும் ஆக ஆறு தீபமிட்டு ஆறுமுகற வழி செய்து வந்தால், சீரும் சிறப்பும் வந்து சேரும்.

இந்த விரதத்தை மேற்கொள் ளும் போது, முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் உள்ள படம் வழிபட வேண்டும்.

செவ்வாய்க்கிழமை பிறந்த வர்களும், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள், ரத்த சம்பந்தமான நோய் இருப்பவர்கள், ஒன்பது வாரம் இல்லத்தில் விரதம் இருந்து 10வது வாரம் பலன் தரும் பரிகார தலத்திற்கு சென்று வழிபட்டால், நிலைமை சீராகும். வாழ்வு சிறக்கும்.



www.aanmeegamalar.com

# ஆன்மிக மலர்கள்

# காளியோடு சேர்ந்து சிவன் திருநடனம் ஆடிய தலம்




- வில்வப் பிரியை (வில்வத்தைவிரும்புபவள்) என்பது லட்சுமியை குறிக்கும்.
- செவ்வாய்,சனிகிரகத்தின் தொல்லைகளைநீக்கும் பெண் தெய்வம் மகாலட்சுமி.மகாலட்சுமி கிரக தோஷங்களை நீக்கும் சக்தி படைத்தவள் என்று சொல்லும் நூல் ஸ்ரீசூக்தம். அதை எழுதியவர் மகாகவி வேங்கடாத்வரீ.
- இரு கை கொண்டு வாங்க வேண்டிய பொருட்கள் புத்தகம், வெற்றிலை பாக்கு, திருநீறு, தங்க நகை, உடை.
- வீட்டில் லட்சுமி தங்க ஆதிசங்கரர் அளித்துள்ள ஸ்தோத்திரம் கனகதாராஸ்தவம்.
- பாற்கடலில் லட்சுமியின் அருகில் நிற்கும் மரங்கள் பாரிஜாதம், கற்பகதரு.
- "விஜயா' என்ற பெயர் ராஜலட்சுமியை குறிக்கும்.
- பட்சிராஜர் என்று போற்றப்படுபவர் கருடாழ்வார். கருடனின் அம்சமாகப் பிறந்த ஆழ்வார் பெரியாழ்வார்.
- வாசுதேவன் என்பதன் பொருள், எங்கும் நிறைந்தவன்.
- அர்ச்சகர் அம்பிகையாக சிவனை பூஜிக்கும் தலம் திருவானைக்காவல்.
- தேவாரத் தலங்களில் சுக்கிரதோஷம் போக்கும் சிவன் கஞ்சனூர் அக்னீஸ்வரர். (தஞ்சாவூர் மாவட்டம்)
- புகழ் பெற்ற அனுமன் சாலிஸாவைப் பாடியவர் துளசிதாசர்.
- முருகனுக்கு மலரால் உண்டான பெயர் கடம்பன் (கதம்ப மலர் முருகனுக்கு உகந்தது).
- விஷ்ணு மூர்த்தமாக சாளக்கிராமம் கல்லை பூஜிப்பர்.
- சிவன் "அம்மா"என்று அழைத்தது காரைக் காலம்மையாரை.
- தாச (பக்தி அடிமை) மார்க்கத்தில் சிவனைப் போற்றியவர் திருநாவுக்கரசர்.
- வாழ்நாளில் ஒரு முறை கூட பழநியைத் தரிசிக்காதவர் பாம்பன் சுவாமிகள்.
- ராமானுஜரை 18 முறை வரவழைத்த பின் உபதேசித்தவர் திருக்கோஷ்டியூர் நம்பி.
- இந்திரனின் மகன் சயந்தன் வழிபட்ட சிவன் திருப்புத்தூர் திருத்தளிநாதர் (சிவகங்கை மாவட்டம்).
- முல்லைவனமாகத் திகழ்ந்த சிவத்தலம் திருக்கருக்காவூர்.
- பஞ்ச சபைகளில் சித்திரசபை எனப்படுவத குற்றாலம்.
- தினமும் பிரதோஷ பூஜை நடக்கும் தலம் திருவாரூர், தியாகராஜ சுவாமி கோவில்.
- தன்னைக் கொல்ல வந்தவரையும் வணங்கியவர் மெய்ப் பொருள் நாயனார்.
- தடாதகை என்னும் பெயரில் வளர்ந்தவள் மதுரை மீனாட்சி.
- குமரகுருபரர் முருகன் மீது பாடியது, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்.
- குசேலர் வாழ்ந்த அவந்தி மத்திய பிரதேசம் மாநிலத்தில் உள்ளது. (தற்போது உஜ்ஜயினி)
- அலங்காரத்தில் விருப்பம் கொண்ட முருகன் அருளும் தலம் திருச்செந்தூர்.

- ⊙ சூர்ப்பனகை என்பதன் பொருள், முறம் போன்ற நகம் கொண்டவள்.
- ⊙ சூரியனுக்கு ஆற்றல் தரும் காயத்ரி மந்திரத்தை உலகிற்கு வழங்கியவர் விஸ்வா மித்திரர்.சூரியவம்சத்தில் மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் ராமாவதாரம்.
- ⊙ விசாலாட்சி என்பதன் பொருள் அகன்ற கண்களைப் பெற்றவள்.
- ⊙ நாட்டரசன் கோட்டையில் (சிவகங்கை) அருளும் தேவி, கண்ணுடைய நாயகி.
- ⊙ சிவனின் கண்ணாகப் போற்றப்படும் பொருள் ருத்ராட்சம்.
- ⊙ ராம சகாயன் என்று அழைக்கப்படுபவன் சுக்ரீவன்.
- ⊙ ராவணனின் அழிவிற்கு விதையிட்டவள் சூர்ப்பனகை.
- ⊙ விஸ்வமித்திரரின் கட்டளையால் ராமன் தாட கையை கொன்றார்.
- ⊙ சீதைக்கு அசோகவனத்தில் உதவி செய்த அரக்கி திரிஜடை.
- ⊙ இந்திரஜித்தின் தாய் மண்டோதரி.
- ⊙ ரகுவம்சத்தின் குலகுருவாக இருந்தவர் வசிஷ்டர்.
- ⊙ ராமாயணத்தில் கரடி முகத்துடன் இருப்பவர் ஜாம்பவான்.
- ⊙ புதனுக்குரியசிவன் கோவில் திருவெண்காடு. (நாகப்பட்டினம் மாவட்டம்)
- ⊙ திருவாய் மொழி பாடியவர் நம்மாழ்வார்.
- ⊙ சிவன் மீது திருப்பல்லாண்டு பாடியவர் சேந் தனார்.
- ⊙ சரவணன் என்பதன் பொருள், நாணற் காட்டில் பிறந்தவன்.
- ⊙ நூபுர கங்கை தீர்த்தம் அழகர் கோவிலில் உள்ளது.
- ⊙ யசோதையாக கண்ணனுக்குத் தாலாட்டுப் பாடியவர் பெரியாழ்வார்.
- ⊙ திருச்சாத்து உருண்டை என்னும் மருந்து வழங்கும் தலம், வைத்தீஸ்வரன் கோவில்.
- ⊙ மதுரையில் சிவன் நிகழ்த்திய திருவிளை யாடல் 64.
- ⊙ தெய்வீகமான வடகிழக்கு திசையை, ஈசானம் என்று குறிப்பிடுவர்.
- ⊙ பிரகலாதனுக்கு தாயின் கருவிலேயே உப தேசித்தவர் நாரதர்.




- ⊙ 'விழிக்கே அருளுண்டு' என்று அம்பிகையைப் பாடியவர் அபிராமி பட்டர்.
- ⊙ சுப்ரபாதம் என்பதன் பொருள் "நல்ல காலை வேளை".
- ⊙ கூடற்கலாப மயில் எனப்படும் அம்பிகை மீனாட்சி அம்மன்.
- ⊙ ஆழ்வார்களில் அமர்ந்தபடி காட்சியளிப்பவர் நம்மாழ்வார்.
- ⊙ தட்சிணேஸ்வர காளியுடன் நேரில் பேசிய அருளாளர் ராமகிருஷ்ண பரமஹம்சர்.
- ⊙ தாமரையின் பேரால் குறிக்கப்படும் சங்கரரின் சீடர் பத்மபாதர்.
- ⊙ சென்னை காளிகாம்பாளை வழிபட்ட மன்னர் சத்ரபதி சிவாஜி.
- ⊙ வயலூர் முருகனை இஷ்ட தெய்வமாக போற்றியவர் வாரியார்.
- ⊙ அன்னத்தின் பெயரோடு சேர்த்து வழங்கப் படும் தலம் திருச்சோற்றுத்துறை.

www.aanmeegamalar.com

# கோவில் பராமரிப்பு அக்காலமும் இக்காலமும்

கோவில்கள் மற்றும் தெய்வங்களை, இன்றைய காலகட்டத்தில் வருமானம் தரும் ஒரு நிறுவனங்களாக மாற்றிவைத்துள்ளனர். அன்புக்கும் பக்திக்கும் கட்டுப்பட்ட இறைவனை, இன்றைய கலியுகத்தில் பொம்மையாக மாற்றி வைத்துள்ளது மிகுந்த வேதனையான விஷயம் தான்.

புகழ் பெற்ற அனைத்து கோவில்களும் கோடிகளை சம்பாதித்து தரும் ஐடி நிறுவனங்களைப் போன்றுதான் காட்சிதருகின்றன.

பக்தர்களுக்கு மனதளவிலும், உடல் அளவிலும் நிம்மதி தருவதற்காக உருவாக்கப்பட்ட கோவில்களின் ஆகமங்கள், இன்று பணத்திற்கு அடிமையாகிவிட்டது.

காலனி விடுவதிலிருந்து, வி.வி.ஐ.பி.தரிசனம் வரை, பணம் ஆக்கிரமித்துவிட்டது. பக்தர்களுக்கு முக்கியத்துவம் தருவதைவிட பந்தாவாக வருபவர்களுக்கு முக்கியத்துவம் தரப்படுவது வேதனை.

ஒருசில கோவில்களில் பணத்தை காட்டினால் போதும், கோவிலை நிர்வகிப்பவர், இறைவனை மறந்து விடுகிறார். அபிஷேகத்தை தவிர, மற்ற அனைத்தையும் பணத்தை கொடுப்பவருக்கு செய்து விடுகின்றனர்.

மாலை, மரியாதை செய்து இறைவனுக்கு இணையாகவே கௌரவப்படுத்தி விடுகின்றனர். சிறப்பு தரிசனம், வி.ஐ.பி.தரிசனம், வி.வி.ஐ.பி. தரிசனம், என்று நேரிடையாக லீலைகள் செய்தாலும், இன்னொரு பக்கம் கோவிலை சுற்றி காலனிகளை விடுவதிலிருந்து பிரசாதம் விற்பனை செய்வது வரை அனைத்தும் பக்தி மயமாக இன்றி வியாபார மயமாகிவிட்டது.

அக்காலத்தில் எந்த அளவிற்கு பக்தி இருந்தால், பார்த்து பார்த்து கோவிலை கட்டியிருப்பார்கள். ஆனால் அதன் அருமையை பணத்தால் இன்றைய காலத்தில் வீணடிக்கப் படுவது வேதனைதான்.

## தஞ்சை பெரிய கோவிலைப் பற்றிய சுவையான நிகழ்வை பார்ப்போம்....

சோழப்பேரரசன் ராஜராஜசோழனின் அரண்மனையில் ஒருநாள் மன்னனைப் பார்த்து...

''சோழப்பேரரசே கோவிலுக்காக கொடுத்த நன்கொடைகள் ஏராளம். இருந்தாலும், உங்கள் திருமுகத்தில் தீராத கவலை படிந்திருக்கிறதே என்ன காரணம்?'' என்றார் அமைச்சர்.

மன்னர் கண்மூடி யோசித்தார். நெடுங்காற்றை உள்வாங்கி சீராக மூச்சுவிட்டார். கண் திறந்தார். நிதானமான குரலில் பேசத்தொடங்கினார்.

'சோழப்பேரரசின் அடையாளம் இந்தப்பெருவுடையார் கோவில். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் அழியக்கூடாது என்றுதான் கவலைப் படுகிறேன்.

அரண்மனைகள் தனிச்சொத்து, ஆலயங்கள் மக்கள் சொத்து என்று கருதப்படுமாயின் மக்களுக்கும் இதில் பங்கிருக்க வேண்டும். சோழமண்டலத்தில் கடைக்கோடியில் சிற்றூரில் வாழும் மக்களும் இந்த ஆலயத்தின் பங்குதாரர்களாக மாற்றிவிடும் திட்டத்தைத்தான் சிந்தித்து கொண்டிருக்கிறேன்' என்றார்.

திட்டம் என்ன மன்னா? அமைச்சர் கேட்டார்.

அதோ அந்த திருவிளக்குகள் செல்வந்தர்களின் நேர்த்தி கடன்களால் எரிகின்றன. தினந்தோறும் கோவில்களில் தீபங்கள் எரிய வேண்டும். அதற்காக ஆடுகளையும், மாடுகளையும் ஏழைகளுக்கு வழங்கப் போகிறேன். அதற்குப் பதிலாக அவர்கள் திருவிளக்குகள் எரிய நெய் தந்தால் மட்டும் போதும். மொத்த வருமானமும் அவர்களுக்கே. அதாவது ஏழையின் அடுப்பும், ஆலயத்தின் திருவிளக்கும் ஒரே திரியில் எரியும். இந்த



www.aanmeegamalar.com

ஆலயத்தோடு அடித்தட்டு மக்களுக்கு உறவு மேம்படும். இதுதான் என் திட்டம், சரியா?' என்றார்.

'மிகச்சரியானது மன்னா' என்று வணங்கினார்.

அரசன் ஆணை பிறப்பித்தான். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும். கால்நடைகளை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுங்கள். எந்த நிலையிலும் நிபந்தனை வழங்காது கட்டுப்பாடு வகுத்து கண்காணியுங்கள் என்றான்.

ஒருநாள் கோவில்களை சுற்றி வரும் பொழுது ஒரு கோவிலில் மட்டும் விளக்கு எரியவில்லை. காரணம் கேட்டறிந்தார்.

எவத்தூர் மாராயன் என்பவனுக்கு 42 பசு மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவனுடைய கட்டுப்பாட்டில் எரிய வேண்டிய விளக்குகடந்த ஏழுநாட்களாக எரியவில்லை என்பதை அறிந்தார்.

'எவனவன், இறைவன் கட்டளையை நிறைவேற்ற மறுப்பவன். பூட்டுங்கள் தேரை, ஓட்டுங்கள் எவத்தூருக்கு' என்றான்.

காலி மனையால் சூழப்பட்ட ஒரு குடிசையின் முன் மன்னரின் தேர் நின்றது. 'பேரரசன் வந்திருக்கிறேன், மாராயா வெளியே வா' என்று குரல் கொடுத்தார்.

உள்ளே ஒரு பெண்ணின் விசும்பலும், குழந்தையின் அழுகுரலும் கேட்டது.

சற்று நேரத்தில் கதவைத்திறந்து கசங்கிய சேலையும், கலைந்த கூந்தலும், கலங்கிய கண் களுமாய் பெண்ணொருத்தி வெளியே வந்தாள். அவளது இடுப்பில் நாராய் தொங்கிக் கொண்டிருந்தது, சவலை பாய்ந்த குழந்தை ஒன்று. பேரரசரை கண்டதும் அஞ்சி நடுங்கி கீழே விழுந்தாள்.

'எழுந்திரு பெண்ணே! நீ யார்?'

'நாந்தாங்க மாராயன் பொஞ்சாதி'

'உன் கணவன் எங்கே?'

'என் புருஷனும், ராசா கொடுத்த மாடுகளும் போன மாசம் காவிரி வெள்ளத்தில் ஆத்தோடு போயிருச்சி...'

அவள் சொல்வது மெய்யா என்பது போல திரும்பிப்பார்த்தார். ஆம்! என்று வருத்தத்தோடு தலை அசைத்தனர் பொதுமக்கள்.

'உனக்காக வருந்துகிறேன். ஆனால் ஒரு கேள்வி. கடந்த மாதம் இறந்தார் என்கிறாய். ஏழு நாட்களுக்கு முன்பு வரை திருவிளக்கு எரிந்திருக்கிறது. கணவனும், மாடுகளும் இறந்த பின் இருபத்து மூன்று நாட்கள் எப்படி நீ விளக்கு எரித்தாய்?'.

அவள் தேம்பித் தேம்பி அழுதாள். இடுப்பில் நழுவிய குழந்தையை மார்போடு கட்டிக்கொண்டு, 'அதை மட்டும் கேட்காதீர்கள் மன்னா' என்று கண்கலங்கினாள்.

'பெண்ணே!அஞ்சாதே உண்மையைச் சொல்'.

'சொல்கிறேன் மன்னா! புருஷன் செத்துப் போயிட்டாலும், இறை சேவை தடைபடக்கூடாது, மேலும் ராசாவுக்குக் கொடுத்த வாக்கை மீறக்கூடாது பாருங்க. அதனால என் தாய்ப்பாலை விற்று மூணு ஆளாக்கு நெய் வாங்கி தீபத்தை எரிய வச்சேன். ஒரு வாரமாய் தாய்ப்பால் வத்திப்போச்சு, திரு விளக்கு அத்துப்போச்சு. எங்களை மன்னிச்சிருங்க மகராசா' என்று குழந்தையோடு தேரின் காலடியில் விழுந்தாள்.

நடந்ததை அறிந்த பெருமூச்சுவிட்ட மன்னன் ராஜராஜன் துடிதுடித்துப்போனான். கண்கள் கலங்கியது தேகம் சிலிர்த்தது.

தேரைவிட்டு கீழிறங்கி தாயையும் குழந்தையையும் சேர்த்தெடுத்து 'உன்னைப் போன்றவர்களால் தான் பெருமை அடைகிறது என் சோழப்பேரரசு. இன்று முதல் இந்தத்தாயை திருமஞ்சனப் பணிப்பெண்ணாக நியமிக்கின்றேன். அரண்மனை சிற்பியை அழைத்து தாய்ப்பாலால் விளக்கெரித்த இவள் பெயரை கல் வெட்டில் பொறித்து விடுங்கள்' என்றான்.

அக்காலத்தில் மக்களும், அரசும் திருக்கோவில்களை, தங்களது கண்களுக்கு இணையாக, அன்பு பெருக மதிப்பளித்ததின் காரணமாக, இறைவன் நேரிடையாக பல கோவில்களில் காட்சி கொடுத்தான், ஆனால் இன்று கடமைக்காக கோவிலுக்கு போகும் மக்களும், வருமானத்திற்காக கோவிலை பராமரிக்கும் அரசாங்கத்தாலும் கோவில்களின் நிலை பரிதாபமானதாக உள்ளது.

–சி.என்.ராஜா
போன்: 8825844033



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# தீராத நோய், மன கஷ்டம், பணக்கஷ்டம் தீர்க்கும்

# வராகி வழிபாடு

நாம் எல்லோரும் நினைக்கும் அளவிற்கு வாராஹி தேவி கோப குணத்தை கொண்டவள் இல்லை. குழந்தை மனம் கொண்ட வாராஹி தேவியை தன்னலம் பாராமல், கெட்ட எண்ணங்களை மனதில் வைத்துக்கொள்ளாமல் வணங்கினால் கூப்பிட்ட குரலுக்கு ஒடி வந்து உதவி செய்யும் தெய்வம் தான் இந்த வாராஹி அம்மன்.

பொதுவாகவே **கிருத்திகை, பூரம், மூலம், ரேவதி இந்த 4 நட்சத்திரங்களை கொண்டவர்கள் வாராஹி அம்மனை மனதார வழி பட்டாலே போதும்.** அவர்களுக்கு உடனடியாக பலன் கிடைத்துவிடும். இந்த நட்சத்திரம் இல்லாதவர்கள், இந்த நட்சத்திரம் வரும் நாட்களில் வாராஹி அம்மனை வழிபடுவது சிறந்தது.

நமக்கு இருக்கும் தீராத கஷ்டமாக இருந்தாலும், தீராத நோயாக இருந்தாலும், தீராத மன கஷ்டம், பணக்கஷ்டம், எப்படிப்பட்ட கஷ்டமாக இருந்தாலும் வாராஹி அம்மனை நினைத்து, தலைவாழை இலை விரித்து, அதில் பச்சரிசியை கொட்டி பரப்பி, அதன் மேல் ஒரு தேங்காயை உடைத்து இரண்டுமுடிகளாக வைத்து, அதில் இலுப்ப எண்ணெய் ஊற்றி, சிவப்பு திரி போட்டு, தீபம் ஏற்றினால் போதும்.

இந்த பரிகாரத்தை உங்கள் வீட் டின் அருகில் வாராஹி அம்மன் கோவில் இருந்தால் அங்கு செய்யலாம். கோவி லுக்கு செல்ல முடியாதவர்கள் வீட்டிலேயே சிறிய வாராகி அம்மன் திருவுருவப் படத்தை வைத்து அதன்முன் செய்து வரலாம்.

வாராஹி அம்மனுக்கு சிவப்பு மலர் மிகவும் விருப்ப மானது அதிலும் சிவப்பு தாமரை மிகவும் பிடிக்கும். பஞ்சமி திதி அன்று வராகியை மனதார நினைத்து வழிபடுவது நல்ல பலனைத்தரும்.



# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# இடியாக உருவெடுத்து இந்திரன் வழிபாடு செய்யும்

# திருக்கழுக்குன்றம் வேதகிரிஸ்வரர்

திருக்கழுக்குன்றம் வேதகிரிஸ்வரர்கோயில் வளாகத்திற்கு பெயர் பெற்றது, இது பிரபலமாக கழுகு கோயில் என்று அழைக்கப்படுகிறது. இந்த கோயில் இரண்டு கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது, ஒன்று மேல்மலையில் வேத கிரீஸ்வரர்கோயில் என்றும் மற்றொன்று கோயிலுடன் இணைக்கப்படுவது பகவதச்சலேஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

பத்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த கோயில் பல தீர்த்தங்களால் சூழப்பட்டுள்ளது. திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையர் கோயிலின் கட்டிடக்கலைக்கு ஒத்திருக்கும் இந்த கோவிலை நான்கு மகத்தான கோபுரங்கள் அலங்கரிக்கின்றன.

திருக்கழுக்குன்றம் என்ற சொல் திரு (மரியாதைக்குரிய), கழு), குந்தரம் (மவுண்ட்) என்ற தமிழ் சொற்களிலிருந்து வந்தது. இது பண்டைய காலங்களில் "திருகாஷுகுகுண்ட்ரம்" என்று அழைக்கப்பட்டது, இது நாளடைவில் திருக்கழுக்குன்றம் ஆனது. ஒரு ஜோடி கழுகுகள் இருப்பதால் இந்த நகரம் பக்ஷி தீர்த்தம் (கழுகுகளின் புனித ஏரி) என்றும் அழைக்கப்படுகிறது

பல நூற்றாண்டுகளாக இந்த இடத்திற்கு வருகை தந்ததாக நம்பப்படும் எகிப்திய கழுகுகள். இந்த கழுகுகள் பாரம்பரியமாக கோவில் பூசாரிகளால் உணவளிக்கப்படுகின்றன அரிசி, பருப்பு, நெய் மற்றும் சர்க்கரை ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் பிரசாதங்களை சாப்பிடுவதற்கு நண்பகலுக்கு சரியான நேரத்தில் வருகின்றன.

இருந்தாலும், இப்பொழுது கழுகுகள் திரும்பத் தவறியது பார்வையாளர்களிடையே "பாவிகள்" இருப்பதே காரணம். இது கடந்த காலங் களில் உருத்ரகோடி, நந்திபுரி, இந்திரபுரி, நாராயண புரி, பிரம்மபுரி, தினகரபுரி, முனிகனபுரி என்றும் அழைக்கப்பட்டது. கோவிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. இது பக்ஷிதிர்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

புராணத்தின் படி, பரத்வாஜ முனிவர் சிவபெருமானிடம் நீண்ட ஆயுளைப் பெற பிரார்த்தனை செய்தார், இதனால் அவர் அனைத்து வேதங்களையும் கற்றுக்கொள்ள முடியும் என நம்பினார். சிவன் அவர் முன் தோன்றி அவருக்கு வேதங்களைக் கற்றுக்கொள்ள விருப்பம் அளித்தார், மேலும் ஒவ்வொன்றும் ஒரு வேதத்தை (ரிக், யஜூர் மற்றும் சாமா) குறிக்கும் மூன்று மலைகளை உருவாக்கினார்.

சிவன் ஒரு பிடி மண்ணை எடுத்து "அன்புள்ள பரத்வாஜா! இங்குள்ள மலைகளுடன் ஒப்பிடும்போது நீங்கள் கற்றுக் கொள்ளக்கூடிய வேதங்கள் மிகக் குறைவு, நீங்கள் நீண்ட காலம்








வாழ்ந்தாலும், கற்றல் ஒருபோதும் முடிவடையாது” என்று கூறியதாக கூறப்படுகிறது.

வேதகிரிஸ்வரர் கோயில் கட்டப்பட்ட மலை, சிவன் தானே உருவாக்கிய வேதங்களைக் குறிக்கும் மலைகள் என்று நம்பப்படுகிறது. வேத கிரிஸ்வரர் என்ற பெயருக்கு சமஸ்கிருதத்தில் “வேத மலைகளின் இறைவன்” என்று பொருள்.

265 ஏக்கர் பரப்பளவிலான இந்த மலை 500 அடி உயரமும், 562 கல் படிக்கட்டுக்களில் ஏறு வதன் மூலம் மலையை அடையலாம். வழியில் யாத்ரீகர்கள் ஓய்வெடுக்க சிறிய மண்டபங்கள் உள்ளன. நன்கொடைகளிலிருந்து படிகளும் பக்க சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

படிகள் ஏறுவதற்கு முன், பக்தர்கள் சித்தார்தி விநாயகனையும், அய்யப்பாவையும் மலையின் அடிவாரத்தில் வணங்குகிறார்கள்

முக்கிய ஈர்ப்பு, பெரிய கோயில் மலை உச்சியில் உள்ள கோவிலில் வேதகிரிஸ்வரர் என்று அழைக்கப்படும் சிவன் தெய்வம் உள்ளது. வேதகிரிஸ்வரர் தெய்வம் காணப்படும் கோயிலின் மைய ஆலயம் மூன்று பெரிய கற்பாறைகளால் கட்டப்பட்டுள்ளது, இது கருவறைக்கு மூன்று சுவர்களைக் கொண்டுள்ளது. வேதகிரிஸ்வரர் ஒரு சுயம்பு லிங்கம்.

வேதகிரிஸ்வரரை இந்திரன், தில்லோதாமா, கருடன், அஷ்டவாசஸ் மற்றும் பல ருத்ரர்கள் வணங்கினர். நான்கு நாயன்மார்கள், அப்பர், சுந்தரர், மணிக்கவாசகர் மற்றும் திருஞான சம் மந்தர் ஆகியோர் திருக்கழுக்குன்றம் வருகை தந்து வேதகிரிஸ்வரரைப் புகழ்ந்து பாடல்களை இயற்றினர்

இந்திரன் இன்றும் இறைவனை வணங்கு கிறார் என்று நம்பப்படுகிறது. இந்த உண்மைக்கு சான்றாக, கருவறைக்கு மேலே உள்ள கோபுரத்



வேலன்

தின் ஒரு துளை வழியாக இடி விழுந்து சிவ லிங்கத்தை சுற்றி செல்கிறது. இந்நிகழ்வு பன்னி ரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கிறது. இந் நிகழ்வு நடைபெற்ற அடுத்த தினம், கரு வறை திறக்கும்போது தாங்க முடியாத வெப்பம் அனுபவிக்கப்படுகிறது. 1930 நவம்பர் 10–ஆம் தேதி இதுபோன்ற சம்பவம் நடந்ததாக விஞ்ஞானிகள் நிரூபித்திருந்தனர்.

கருவறையின் உட்புறச் சுவர்களில் பல உருவங்கள் உள்ளன, இவை அனைத்தும் தெய்வத்தைச் சுற்றியுள்ள பாறையிலிருந்து வெட்டப்படுகின்றன. கருவறையைச் சுற்றியுள்ள அடைப்பில், சொக்கநாயகி மற்றும் விநாயக தேவிகளின் சன்னதிகள் உள்ளன.

1992ம் வருடத்திற்கு முன்பு வரை கழுகுகள் இத்தலத்தை தரிசித்ததாக கூறப்படுகிறது.

வேதகிரிஸ்வரரின் தரிசனத்திற்குப் பிறகு, பக்தர்கள் மதியத்திற்கு சற்று முன்பு கழுகுகளின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த் துக் கொண்டிருந்தார்கள். அருகிலுள்ள கற் பாறையில் ஒரு குறிப்பிட்ட இடத்தை சுத்தம் செய்தபின், கோவில் தேசிகர் உணவுடன் உட்கார்ந்துகொள்கிறார்.

இரண்டு கழுகுகள், கோவில் உச்சியைச் சுற்றி வந்த பிறகு, தேசிகர் அருகே நடந்து வருவது வழக்கம். அவைகள் சர்க்கரைப்பொங்கலை சாப்பிட்டபின்னர், அருகிலுள்ள ஒரு சிறிய பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள தண்ணீரில் தங்கள் மூக்குகளை சுத்தம் செய்தபின், கிளம்பி, கோபுரத்தை சுற்றி வட்டமிட்டு பறந்து செல்லுகின்றன.

கீழ் கோவிலில், திருப்புரசுந்தரி தேவிக்கு முன்னால் உள்ள சுவர்களில் ஒன்றில் இந்த காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

இரண்டு கழுகுகளின் வருகை பற்றி பல கதைகள் கூறப்படுகின்றன. இரண்டு ரிஷிகள்

(முனிவர்கள்) பூஷா மற்றும் விததாவை, சிவன் கழுகுகளாக மாற சபித்தார், சிவனை வணங்குவதற்கும், அவருடைய சாபத்திலிருந்து விமோச்சனம் பெறுவதற்கும், இந்த இரண்டு கழுகுகளும் பழங்காலத்தில் தினமும் திருக்கழுக்குன்றத்திற்கு வருகை தந்ததாக நம்பப்படுகிறது.

மிகவும் சுவாரஸ்யமாக இந்த கழுகுகள், காலையில் கங்கையில் குளித்தபின், மதியம் உணவுக்காக திருக்கழுக்குன்றம் வந்து, தரிசனத்திற்காக மாலையில் ராமேஸ்வரத்தை அடைந்து, இரவுக்கு சிதம்பரத்திற்குத் திரும்புவதாகக் கூறப்படுகிறது.

1992 முதல், கழுகுகள் வேதகிரிஸ்வரர் கோவிலுக்கு வருவதை நிறுத்திவிட்டன.

கலியுகத்தின் கடைசி ஜோடி இறுதியாக மோட்ச அடைந்திருக்கலாம். என்று நம்பப்படுகின்றன.

இந்த கழுகுகள் பற்றிய மிகவும் சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று நடைபெற்றதாக கூறப்படுகிறது.

ஜூன் 17, 1921 அன்று சுமார் காலை 9.00 மணிக்கு இரண்டு வெள்ளை கழுகுகள் மதுரை கோவிலில் காணப்பட்டன.

அந்த கழுகுகள், ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் உள்ள பொற்றாமரை குளத்தில் குளித்துவிட்டு படிகளில் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்தன.

திருக்கழுக்குன்றம் கோவிலுக்கு வரும் கழுகுகள்தான் மதுரையில் பொற்றாமரை குளத்தில் காணப்பட்டதாக பல்வேறு ஆய்வுகள் மூலம் அறியப்பட்டது.

வேதகிரீஸ்வரர் மலையிலிருந்து சில படிகள் இறங்கிய பிறகு, ஒரு ஒற்றைக் குகைக் கோயில் காணப்படுகிறது.

இந்த குகையில் இரண்டு வராண்டாக்களுடன் அரிய சிற்பங்களால் நிறைந்துள்ள ஒரு மண்டபம் உள்ளன. ஒவ்வொன்றும் நான்கு பிரமாண்ட தூண்கள் உள்ளன. விசித்திரம் என்னவென்றால், சிற்பங்களுடன் கூடிய முழு மண்டபமும் ஒரே பாறையிலிருந்து வெட்டப்படுகிறது. எனவே இந்த குகை ஒருகல் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது.

கிழக்குப் பகுதியில், மலையின் அடிவாரத்தில், ஒரு சிறிய சன்னதியில் நால்வர் கோயில் உள்ளது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் மற்றும் மணிக்கவாசகர் ஆகிய நான்கு பேரும் வேதகிரிஸ்வரரை தரிசனம் செய்தனர். வேதகிரிஸ்வரரின் துணைவியார் மலையடிவாரத்தில் காணப்படவில்லை. நகரத்தின் மையத்தில் உள்ள பகவத்சலேஸ்வரர்




கோவிலில்அம்மன் கோயில் உள்ளது.

இந்த கோவிலில் நான்கு கோபுரங்கள் (கோபுரங்கள்) உள்ளன, மிக உயரமானவை ஒன்பது அடுக்குகளுடன் (வடக்கு பக்கத்தில்), மற்ற மூன்று அடுக்குகளும் உள்ளன. மலையில் தெய்வத்திற்கு முன் நந்தி இல்லாதது ஒரு தனித்துவமான அம்சமாகும். நந்தி ஒரு முறை பூமியில் தவம் செய்தார். மகிழ்ச்சி அடைந்த சிவபெருமான் அவர் முன் தோன்றி ஒரு வரம் கேட்கச் சொன்னார்.

அந்த இடத்திற்கும் குளத்திற்கும் தனது பெயரை வைக்க வேண்டுமென நந்தி விரும்பினார், குளத்தில் நீராடி வேதகிரிஸ்வரரை வணங்குபவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து விடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரது பிரார்த்தனை வழங்கப்பட்டது, எனவே இந்த இடம் நந்திபுரம் என்றும் குளம் நந்தி தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

குன்றைச் சுற்றி 12 தீர்த்தங்கள் (புனித நீர் குளங்கள்) உள்ளன, அதாவது இந்திர தீர்த்தம், சம்பு தீர்த்தம், ருத்ரா தீர்த்தம், வசிஷ்ட தீர்த்தம், மேகியான தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம் அல்லது சங்க தீர்த்தம், கொள சிக தீர்த்தம், நந்தி தீர்த்தம், வருண தீர்த்தம் பக்ஷி தீர்த்தம்.மேற்கண்ட 12 தீர்தங்களில், சங்கு தீர்த்தம் மிகவும் புகழ்பெற்ற புனித குளம் ஆகும். இது 1,000 சதுர கெஜம் பரப்பளவு கொண்ட ஒரு விரிவான குளமாகும், எல்லா பக்கங்களிலும் பரந்த படிகள் உள்ளன.புனித மார்க்கண்டேயர் இங்கு வந்ததாக நம்பப்படுகிறது. புனித குளத்தில் குளித்துவிட்டு இங்குள்ள சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய அவர் விரும்பினார், ஆனால் தண்ணீரை எடுக்க எந்த பாத்திரத்தையும் அவர் காணவில்லை.அப்போதே திடீரென குளத்தில் இருந்து சத்தத்துடன் சங்கு வெளிவந்தது, மார்க்கண்டேயர் அபிஷேகம்

www.aanmeegamalar.com




செய்தார். இப்போது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட, இந்த நீரிலிருந்து ஒரு சங்கு வெளிப்படுகிறது, இதை கோவில் அதிகாரிகள் அனைத்து மரியாதையுடனும் சேகரித்து கோயிலில் பாதுகாக்கப்பட்ட கண்ணாடி பெட்டியில் அதில் குறிப்பிடப்பட்ட தேதிகளுடன் பாதுகாக்கப்படுகிறது.

ஒரு சங்கு பிறக்கும் இயற்கையான நிகழ்வு உப்பு நீரில் மட்டுமே நிகழக்கூடும் என்பதால் புதிய நீரில் ஒரு சங்கு உருவாகிறது என்பது ஆச்சரியமளிக்கிறது. இந்த கோவிலில் சுமார் 1,000 சங்குகள் உள்ளன, அதனுடன், தமிழ் கார்த்திகை மாதத்தில் கடைசி திங்கட்கிழமை வேதகிரிஸ்வரருக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. ஸ்தலபுராணத்தின் படி, சிவபெருமானே இந்த குளம் அனைத்திலும் புனிதமானது என்று அறிவித்துள்ளார், அவருடைய கட்டளைப்படி, குரு (வியாழன்) கன்யா ராசியில் நுழையும் போது இந்தியாவில் உள்ள அனைத்து புனித நீர்களும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்கு சந்திக்கின்றன. இந்நிகழ்ச்சி ஒரு திருவிழாவாக நடத்தப்படுகிறது.

ஆஸ்துமா, இரத்த அழுத்தம் மற்றும் இதயம் போன்ற எந்தவொரு தீவிரமான நோய்களும் இறைவனிடம் பிராத்தனை செய்வதன் மூலம் குணப்படுத்தப்படுகின்றன. அவை மூலிகை விளைவுகளால் காற்றை சுவாசித்து குணமடைகின்றன.

திருவண்ணாமலைக்கு அடுத்தபடியாக, கிரிவலம் இங்குள்ள பக்தர்களால் பௌர்ணமி நாட்களில் அனுசரிக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் லட்சக்கணக்கான மக்கள் இணைகிறார்கள். திருவண்ணாமலையில் துவங்குவதற்கு முன்பே இந்த கோவிலில் கிரிவலம் நடைமுறை நடைமுறையில் இருந்தது என்று கூறப்படுகிறது.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

# ராசி பலன்கள்

**01.03.2021 முதல் 15.03.2021 வரை**



### மேஷம் ராசி அன்பர்களே உங்களுக்கு

வேலையில் மாற்றம் எற்படும் குடும்பதில் மகிழ்ச்சிகள் நிலவும் பணவரவு அதிகரிக்கும் தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும் எதிர்பாராத பணம் வந்து சேரும் ஆன்மீக பயணம் செல்வதற்கான வாய்புகள் ஏற்படும் புதிய வீடு,வாகன,பொருள் சேர்க்கை எற்படும்.மனைவியிடம் கருத்து வேறுபாடுகளை தவிர்ப்பது நல்லது ஆயுள் காப்பீட்டு திட்டங்களில் கவணம் தேவை, உத்தியோக உயர்வு உண்டு, ஆரோக்கியம் மேம்படும்

### ரிஷபம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும்,நீங்கள்புதியமுயற்சிகளிள் ஈடுபடுவீர்கள், குழந்தைகள் மூலம் மகிழ்ச்சிகள் உண்டாகும்,நோயிலிருந்து விடுபடுவீர்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும் உயர் அதிகரிகளால் பாராட்டுகள் குவியும் கௌ ரவம் தரக்கூடிய விஷயங்கள் நடக்கும், திருமணம் மூலம் மகிழ்சிகள் உண்டாகும் திருமண வயதில் உள்ளவர்களுக்கு திருமண பேச்சுகளால் மகிழ் சிகள் உண்டாகும் மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் அதிகரிக்கும்

### மிதுனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் சற்று கடினமான காலமாக இருக்கும் தொழிலில் மாற்றங்கள் செய்ய வேண்டாம், பொருளாதார சிக் கல்கள் ஏற்படும் குடும்பத்தில் கருத்து வேறுபாடு அதிகரிக்கும் கொடுக்கள் வாங்களில் கவணம் தேவை திருமண முயற்சிகளில் தொய்வு ஏற்படும் மாணவர்கள் படிப்பில் அதிக கவணம் செலுத்த வேண்டும் வெளியூர் பயணங்களை தவிர்ப்பது நல்லது குலதெய்வ வழிபாடு நன் மையை தரும்

### கடகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் நீண்ட நாட்களாகவர வேண்டிய பணம் வந்துசேரும் கடன் பிரச்சனைகள் தீரும் படிப்பில் பின்தங்கிய நிலை காணப்படும் ஆரோக்கியத்தில் அதிக கவணம் தேவை திருமணம் கைகூடும் தந்தை வழி சொத்து பிரச்சனைகள் முடிவுக்கு வரும் கூட்டுதொழிலில் கவனம் தேவை தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும் ஒருவிதமான பயம் இருந்து கொண்டே இருக்கும் மனைவியின் அன்பு ஆதரவாக இருக்கும் பணம் கடனாக யாருக்கும் தரவேண்டாம் குழந்தைகள் ஆரோக்கியத்தில் கவணம் தேவை.

### சிம்மம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் தேவைக்கு அதிகமாக பணம் கிடைக்கும் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்த்துகொள்ளவும் மனை வியின் அன்பு அதிகரிக்கும் ஆன்மீக பயணங்களை மேற்கொள்வீர்கள் அனைத்து விஷயங்களிலும் பொறுமையாக செயல்படுவது நன்மையை தரும் பொருளாதார வளர்ச்சி நன்றாகவே இருக்கும் வேலையில் உள்ள பிரச்சனைகள் தீரும் பெரி யோர்களின் ஆலோசனைபடி செயல்படுவது நல்லது மானவர்களுக்கு படிபில் மந்தநிலை காணப்படும்

### கன்னி ராசி அன்பர்களே உங்களுக்கு

தொழிலில் புது புது சிந்தனைகள் மூலம் வெற்றிகள் உண்டாகும் செல வுகள் குறையும் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும் பெரிய அளவிலான கடன்களை கட்டிமுடிபீர்கள் உடல்நலனில் கவணம் தேவை வீண் வாக்கு வாதத்தை தவிர்த்து கொள்வது நல்லது பெரி யோரின் ஆசீர்வாதம் கிடைக்கும் வழக்கு விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும் மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டு குழந்தைகளால் மகிழ்சிகள் வந்து

www.aanmeegamalar.com

சேரும் மாத தொடக்கத்தில் லாபம் அதிகமாக இருக்கும்

## துலாம் ராசி அன்பர்களே உங்களுக்கு



இந்த மாதம் பொருளா தாரம் சிறப்பாக இருக்கும் அரசாங்க ஆதரவு அதி கரிக்கும் இது மகிழ்ச் சிகரமான மாதமாக இருக்கும் உங்க ளுடைய எண்ணங்கள் அனைத் தும் வெற்றிபெறும் இடமாற்றங்கள் உண்டு திருமணம்கைகூடும் குழந்தைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் பெண் தெய்வ வழிபாடு சிறப்பை தரும் தொழில் போட்டிகள் அதிகரிக்கும் மாணவர்கள் போட்டிதேர்வில் வெற்றி பெறு வீர்கள் பயணங்களில் கவணம் தேவை திருமண பேச்சுவார்தைகள் மகிழ்சியை தரும்

## விருச்சிகம் ராசி அன்பர்களே உங்களுக்கு



மனைவிமூலம் சொத்துகள் சேறும் ஊழைப்புகேற்ற ஊதியம் வந்து சேரும்குடும்பதில் பிரச்சனை நில வும் மாணவர்களுக்கு படிப்பில்ஆர்வம் அதிகரிக்கும்வேலை தேடு பவர்களுக்கு வேலை கிடைக்கும் ஒருவித பயம் எப்போதும் இருக்கும் கொடுக்கள் வாங் களிள் கவணம் தேவை பணவரவு சீராக இருக்கும் கௌரவம் அதிகரிக்கும் மனைவி மூலம் சொத்துகள் சேரும் நீண்ட நாட்களாக விற்பனையாகாத இடம் விற்பனையாகும் கொடுக்கவேண்டிய கடன்களை கொடுத்து முடிபீர்கள் தொழிலில் லாபங்கள்அதிகரிக்கும்

## தனுசு ராசி அன்பர்களே உங்களுக்கு



இந்த மாத தொடக்கதில் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.குடும்பதில் சுப நிகழ்சிகள் நடைபெறும் குழந்தைகளால் மகிழ்ச்சிகள் அதிக ரிக்கும் தொழிலில் போட்ட திட்டங்கள் வெற்றி யை தேடிதரும் தொழில் மூலம் வருவாய் அதிகரிக்கும் மாணவர்கள் படிப்பில் அதிக கவணம் செலுத்துவது நல்லது திருமணவயதில் உள்ளவர்களுக்கு திருமணம் கைகூடும் வீடு வாகன சேர்க்கை ஏற்படும் தந்தை வழி உறவுகளால் வர வேண்டிய சொத்துக்கள் வந்து சேரும். ஆரோக்கியம் மேம்படும் வேலையில் சாதகமான சூழ்நிலை ஏற்படும் வெளியூர் பயணங் களை மேற்கொள்வீர்கள்


ஜெய் ஸ்ரீராம்

## மகரம் ராசி அன்பர்களே உங்களுக்கு



இந்த மாதம் தொழில் நன்றாக இருக்கும் மாணவர்களுக்கு மிகசிறந்த காலம் குடும்பதில் ஒற்றுமை அதிகரிக்கும் செலவுகள் அதிகரிக்கும் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும் புதிய தொழில்களை தொடங்குவீர்கள் உயர் அதிகாரிகளால் நன்மை ஏற்படும் உங்களுடைய திட்டங்களில் கவணம்தேவை சகஊழியர்களிடம் பேசும்பொது கவனமாக பேசவும் திடீர் பண வரவுகள் ஏற்படும் கடன்பிரச்சனைகள் முடிவுக்குவரும் நீண்டநாட்களாக வர வேண்டிய பணம் வந்து சேரும்

## கும்பம் ராசி அன்பர்களே உங்களுக்கு



நீண்ட நாட்களாக திருமானமாகாத வர்களுக்கு திருமணம்கைகூடும் சுப விரயங்கள் ஏற்படும் பதவி உயர்வு ஏற்படும் கல்வியில் நல்ல முன் னேற்றம் காணப்படும் குடும்ப உறவுகளில் விட்டுக் கொடுத்து போவது நன்மையை தரும்புதிய முயற்சிகளில் கவனம் தேவை தொழிலுக்காக கடன் வாங்குவீர்கள் உயர் அதிகாரிகளால் பாராட்டபடுவீர்கள் வசதிகள் அதிகரிக்கும் தான தருமங்கள் செய்வீர்கள் ஆன்மீக சுற்றுல்லா குடும்பதுடன் சென்று வருவீர்கள்

## மீனம் ராசி அன்பர்களே உங்களுக்கு



சொந்த தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் முக்கிய முடிவுகளில் கவணம் தேவை திருமணம் கைகூடும் பணவரவு அதிகரிக்கும் நிதானமாக செயல்படுவது நல்லது வெளிநாட்டுதொடர்பான விஷயங்களில் வெற்றிகள் வந்து சேரும் மாணவர்களுக்கு படிப்பில் கவணக்குறைவு ஏற்படும் பதவி உயர்வு ஏற்படும் வீண் செலவுகள் அதிகரிக்கும் எதிரிகளால் பிரச்சனைகள் எயற்படுவதற்க்கு வாய்ப்பு உள்ளது வெளிநாட்டு வேலை கிடைக்கும் குடும்பதில் ஒற்றுமை நிலவும் குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

ஜோதிடர் ஜெய் ஸ்ரீராம்
DME.,BA.,MA.,(ASTROLOGY)
மயிலாடுதுறை CELL 9487215736



# இந்து மதத்தின் ஆதிகளைகள்

சிந்து சமவெளியில் பல இடங்களில் லிங்க உருவம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த மக்கள் லிங்க வழிபாட்டை மேற்கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று துணிந்து கூறலாம். ஆனால் வேதங்களில் லிங்க வழிபாடு என்பது சிறப்பித்து கூறப்படவில்லை. மாறாக கேலி செய்யும் பாணியிலேயே சில வேத ஸ்லோகங்கள் அமைந்துள்ளன. இவைகளை வைத்து பார்க்கும் பொழுது வழிபட்டவர்களும் கேலிசெய்பவர்களும் ஒருவராகவே இருப்பார்கள் என்று கூறமுடியாது. வேதகால மக்கள் சிந்து வழியில் வாழ்ந்தவராக இருந்து பிறகு கங்கை வெளியில் பரவி குடியேறி இருப்பார்கள் ஆனால் சிந்துவெளி சின்னங்களாக எழுத்து முத்திரைகளும் செப்பேடுகளை பொறிக்கும் வழக்கத்தையும் தம்முடனே கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால் வேதகால நாகரீகத்தில் இவைகள் முற்றிலுமாகவே இல்லை என்று சொல்லலாம்.

வேதகால மக்களின் மனித சித்திரத்தையும் சிந்துவெளி மக்களின் மனித சித்திரத்தையும் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது மிகப்பெரும் வித்யாசம் இருப்பது தெரிகிறது.

சிந்துவெளி மனிதனின் உதடுகள் தடித்து பிதுங்கி உள்ளதையும் வேதகால மனித உருவம் அதற்கு மாறுபட்ட வடிவில் நேர்த்தியாகவும் அமைந்திருக்கிறது. மொகஞ்சதரோ பகுதியில் கிடைக்கும் களிமண் முத்திரைகளை பசுபதி வடிவிலுள்ள சிவபெருமான் அமைதியான யோக முத்திரையுடன் காணப்படுகிறார்.




ஆனால் வேதத்தில் குறிப்பிடப்படும் ஸ்ரீ ருத்ரன் ரௌத்ர காலத்தில் அதாவது கோபாவேச மூர்த்தியாக காட்டப்படுகிறது. இது மட்டுமல்லாது பெண் தெய்வ வழிபாடு சிந்துமக்களிடம் போற்றத் தக்க அளவில் இருந்திருக்கின்றது. ஆனால் வேதங்களில் பெண் தெய்வங்களுக்கு உரிய முக்கியத்துவம் ஆரம்பத்தில் கொடுக்கப்படவில்லை என்றே சொல்லவேண்டும்.

சிந்துவெளி மக்கள் தங்களது இறைவழிபாட்டில் கோள்கள், விண்மீன்கள் ஆகிய வான மண்டலங்களுடன் மிக நெருங்கிய தொடர்பை வைத்திருந்தார்கள்.

வான சாஸ்திரத்திலும் ஜோதிட சாஸ்திரத்திலும் சிறந்தவர்களாக அம்மக்கள் இருந்திருப்பதற்கான ஆதாரங்கள் பல கிடைகின்றனர். இந்த இரு சாஸ்திரங்கள் அவர்களது வாழ்க்கையில் பின்னி பிணைந்திருப்பதை அவர்களுடைய மனிதபெயர்களுடன் நட்சத்திரங்களின் பெயர்களை இணைந்து வைத்திருப்பதனால் நாம் அறிந்து கொள்ளலாம்.

இந்த கூறுகள் அனைத்துமே ஆரம்பகால வேதங்களிள் இல்லையென்றே சொல்ல வேண்டும். பிற்காலத்திலேயே வானவியலும் ஜோதிடவியலும் வேதங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

மேலே சொன்ன காரணங்களை பின்னர் விரிவாக நாம் பேசினாலும் இன்னும் இருக்கின்ற சில வேறுபாடுகளை இந்த இடத்தில் சுட்டிக் காட்டுவதினால் இந்துமதம்

www.aanmeegamalar.com

வேதகாலத்திற்கு முற்பட்டது என்பதை இன்னும் தெளிவாக நாம் உணர வழி ஏற்படும்.

வேதங்களில் பறவைகளையும், விலங்கு களையும் தெய்வத்தன்மை வாய்ந்ததாக சொல்லும் கருத்துகள் ஆரம்ப காலத்தில் இல்லை.

வேத காலமானது முடிவுக்கு வரும் நேரத்திலேயே அவைகளை புனிதமானதாக கருதும் நிலை ஏற்பட்டுள்ளது.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

அதாவது ஆரம்பகால வேத பாடல்களில் பசுவைபுனிதமாக கருதக்கூடிய எந்த குறிப்பும் இல்லாததை இதற்கு உதாரணமாக சொல்லலாம். சிவனுக்கு எருதுவும் துர்க்கைக்கு சிங்கமும் விஷ்ணுவுக்கு கருடனும் பிரம்மனுக்கு அன்னமும் பிற்காலத்திலேயே வாகனங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இது எப்படி ஏற்பட்டது என்பதை நாம் ஆராய வேண்டும்.

மனிதன் தவிர மற்ற உயிரனங்களும் தெய்வ தன்மையை தங்களோடு வைத்திருப்பதை சிந்து வழி மக்கள் நம்பி பறவைகளையும் விலங்குகளையும் வழிபட்டு இருக்கிறார்கள். இந்த வழிபாடானது திடீரென்று அவர்களுக்கு தோன்றியதாக இருக்க வாய்பில்லை. பல நூறு ஆண்டுகளாக தலைமுறை தலைமுறையாக நம்பி வந்ததையே தங்களது பழக்கத்தில் அவர்கள் வைத்திருக்க வேண்டும்.

சிந்து பகுதி மண் மேடான பிறகு அதிலிருந்து தப்பி பிழைத்த சில மக்கள் கங்கையோரத்தில் குடியேறியிருக்க வேண்டும். பிற்காலத்தில் கங்கை நதி புறத்தில் வேத நாகரீகம் பரவிய போது இந்த மக்களின் வழிபாட்டிலுள்ள கவர்சி மிக்க இந்த அம்சம் வேத விற்பன்னர்களை ஈர்த்து வேதங்களில் இவைகளை பற்றிய குறிப்புகளை ஏற்றியிருக்க வேண்டும். அப்படித்தான் வேதத்தின் கடைசி காலத்தில் இவைகள் வந்திருக்க வேண்டுமே தவிர ஆதியிலிருந்து இம்முறை இருந்ததற்கான வாய்ப்பில்லை.

வேதங்களில் பானிகள் என்று ஒரு புலத்தினர் குறிப்பிடப்படுகிறார்கள் இவர்கள் வணிகர்கள் என்று காட்டப்படுகிறார்கள். இப்பானி மக்கள் வட்டி தொழிலை மேற்கொண்டதாகவும் வேதங்கள் கூறுகின்றன. மேலும் இவர்கள் புதிதான ஒரு வழிபாட்டு முறையை கடைபிடித்ததாகவும் அந்த முறை வேதமுறைக்கு முரணானதாக இருந்ததாகவும் இதனால் வேத நெறி நிற்பவர்களுக்கும் இந்த புலத்தாருக்கும் அடிகடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டதாகவும் க் வேதம் தெளிவாகச் சொல்லுகிறது. இந்த பானிமக்களே சிந்து வழி மக்களாக இருக்க வாய்ப்புள்ளது.

இவர்களுடன் ஏற்பட்ட பகைமையை பெரிதாகக் கொள்ளாமல் இவர்களிடம் உள்ள நல்ல அம்சங்கள் பொருந்திய வழிபாட்டு முறைகளை வேதங்கள் சுவிகாரம் எடுத்து கொண்டிருக்க வேண்டும்.

சிந்துவெளி நாகரீகத்தில் மட்டுமல்ல அதற்கும் முந்தைய காலத்திலும் இந்துமதம் இந்த நாட்டில் இருந்துள்ளது பல சர்ச்சைகள் இருந்தாலும் சிந்து நாகரீக காலத்தை கி.மு.5000க்கு முற்பட்டது என ஆய்வாளர்கள் ஒத்துக் கொள்கிறார்கள் ஆனால் அதற்கு முன்பே அதாவது கி.மு. 90000 ஆண்டிலேயே விநாயகரை வழிபடும் வளக்கம் மக்கள் மத்தியில் இருந்துள்ளது சிந்துமாநிலத்திற்கு அறுகிலுள்ள நௌஸர் என்னும் இடத்தில் சுட்டமண்ணால் செய்யப்பட்ட பிள்ளையார் சிலை 1992 ஆண்டு கண்டெடுக்கப்பட்டது இந்த சிலைக்கு இன்றைய வயது 11 ஆயிரம் வருஷம் மட்டும் தான் இபிகே7712 என பெயர் சுட்டப்பட்ட இந்த விநாயகர் உருவம் தற்போது பாகிஸ்தான் அருங்காட்சியகத்தில் இன்றும் உள்ளது.

வேதங்களில் உள்ள சிறப்பான அம்சமே எந்த வகையிலாவது நல்லவற்றை எடுத்து கொள்வதே ஆகும். ஆரம்பகால வேத ஸ்லோகங்கள் ருத்ரனை மூலமூர்த்தியாக கருதியது கிடையாது ஆனால் சிந்து வழி மக்களிடமிருந்து பசுபதியை சுவிகரித்துக் கொண்டவுடன் வேதக்கடவுளான ருத்ரனின் நிலையை விட பல மடங்கு உயர்ந்த நிலையில் வேதங்களால் பசுபதி போற்றப்படுகிறார்.

யோக முத்திரைகளும் பெண் தெய்வ வழிபாடும் மரம், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் மேன்மைகளும் அப்படியே வெளியிலிருந்துதான் வேதத்திற்குள் அழைத்துவரப் பட்டிருக்கின்றன அவைகள் தான் இந்து மதத்தின் ஆதிகூறுகள் ஆகும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

www.aanmeegamalar.com

# சாத்தானுடன் ஒரு யுத்தம்

இன்றைய உலகம் கொறோனா போன்ற கொடியதிலும் கொடிய கொடூரமான தொற்று வியாதிகள், பேரழிவுகள் மற்றும் பல்வேறு பிரச்சனைகளாகின்ற பெருங்கடலில் பரிதாபமாக மூழ்கிக்கொண்டிருக்கிறது. அதற்கான காரணங்களையும் அவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான பரிகாரங்களையும் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் முன்னரே அருளியுள்ளார். அவற்றில் சிலவற்றை இந்தக் கட்டுரையிலும் தொடந்து வரும் சில தொடர்களிலும் குறிப்பிட விழைகின்றேன். அதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

நல்லவை மற்றும் தீயவற்றின் பிரபஞ்ச யுத்தம்.

ப்ரிய குருதேவர் பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “இடமின்றி அலையும்ஆவிகளுடைய அல்லது செய்வினை சூனியக்காரர்களுடைய சக்திகளின் அற்பமான அச்சுறுத்தலைப் பற்றி ஏன் கவலை கொள்ளவேண்டும்? ஒவ்வொரு கணமும் நமது மகிழ்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் இதைவிட மிகப்பெரிய அபாயம் நமக்கு உள்ளேயும் நம்மைச்சுற்றியும் உள்ளது. இரண்டு சக்திகள் போரிட்டுக்கொள்கின்றன ஒன்று நம்மைக் காப்பாற்றுவதற்கும் மற்றொன்று நமக்கு தீங்கிழைப்பதற்கும். நல்லவை மற்றும் தீயவைக்கு இடையிலான பிரபஞ்ச யுத்தத்தில் நாம் அகப்பட்டுள்ளோம்.”




www.aanmeegamalar.com

“இவ்வுலகு கண்ணுக்குப் புலப்படாதவைகள் அல்லது ஆவிகளால் ஆளப்படுகின்றன. அவை இறைவனாகிய தெய்வத்தந்தை, கூடஸ்தசைதன்யம் (புருவமத்தி) இறைவனுடைய சிம்மாசனத்தின் முன் உள்ள ஏழு ஆவிகள்; மற்றும் சாத்தானுடன் (மாயை) அவனது பெருஞ்சேனையான தீய சக்திகள். இறைவனின் சிம்மாசனத்தின் முன் உள்ள ஏழு ஆவிகளும் படைப்பின் முக்கியமான அறிவுத்திறமுள்ள சக்திகள் அல்ல. (இறைவனின் முதன்மையான படைப்புத்திறனுள்ள அதிர்வு சக்தியான ஓம்) மற்றும் அதனுடைய ஆறு தனிப்படுத்தப்பட்ட படைப்பு சக்திகள். இவை, ஸ்தூல, சூட்சும மற்றும் காரண பிரபஞ்சங்களையும், மனிதனின் ஸ்தூல, சூட்சும மற்றும் காரண சரீரங்களையும் கட்டமைத்துப் பராமரிக்கின்றன.”

“ஆரம்பத்தில் மாயை இறைவனின் ஒரு பிரதான தேவதூதனாக இருந்தான். இறைவனின் திட்டப்படி உலகை கிருஷ்டிப்பதற்கு வேண்டிய சக்தி அவனுக்கு அளிக்கப்பட்டது. அவன் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை முடிததவுடன். படைப்புகள் அனைத்தும் தம்மிடம் திரும்ப வேண்டும் என்று இறைவன் கருதியதற்கு ஏற்ப அவனும் இறைவனிடம் திரும்பவேண்டியிருந்தது. ஆனால் சாத்திரங்களில் மாயை என உருவகப்படுத்தப்பட்டிருந்த இந்த அறிவாற்றல், மெய்பொருளுக்குள் திரும்பச் சென்று விட்டால் படைப்பும் மறைந்து போகும். இதைத் தடுப்பதற்காக சாத்தான் தீய (உலக) ஆசைகளை மனிதனுக்குள் உண்டாக்கிவிட்டான். இவ்வாசைகளின் நிறைவேற்றலானது, மனிதனை மீண்டும் மீண்டும் இப்பூலகிற்கு திரும்பி வருவதை கட்டாயமாக்கி, அதனால் படைப்பு இயந்திரத் தைத் தொடர்ந்து இயங்குமாறு செய்யும். இவ்வாறான முறையில் மனிதன் இறைவனிடம் திரும்புவதற்கு ஒரு வாய்ப்பைப் பெறாமல் இருப்பதை பார்த்துக்கொள்வதற்கு இந்த சாத்தான் முயல்கிறது.”

மேலும் அவர் தொடர்கிறார்: “இறைவனுக்கும் மாயைக்கும் இடையில் பெரியதோர் இழுபறிப் போராட்டம் நடக்கிறது. சாத்தான் வெறும் ஒரு மாயையே என்று ஒருவர் நினைப்பதன் மூலம் இப்பிரச்சனையை அகற்றிவிட முடியாது. உலகிலுள்ள தீமையைப்பற்றி இறைவனுக்குத் தெரியாமல் இருந்தால் அவன் மிகவும் அறிவில்லாதவன் ஆவான். சாத்தான் இல்லாவிடில் இறைவனிடம் பிரார்த்திக்கவேண்டிய

அவசியம் என்ன? தீமை நிச்சயம் இருக்கவே செய்கிறது.”

“இறைவன் மனிதனைப் படைத்தபோது அவன் சாத்தானையும் கூடவே படைத்தான். சாத்தான், தனது மாயையின் சக்தி மூலம் இறைவனின் குழந்தைகளை சோதிப்பதற் காக உள்ளான். இரும்பு நெருப்பில் உருக்கப்படா விட்டால், எஃகு உருவாக்கப்பட முடியாது. நோயோ அல்லது தன்பமோ ஏற்படும்போது அது இறைவனுடைய மாயையின் சோதனை என்பதை நீங்கள் தெளிவாக அறிய வேண்டும். இந்தச் சோதனைகளில் நீங்கள் வெற்றிபெற வேண்டும். அவற்றால் நீங்கள் மனம் தளரக்கூடாது. அநேக மகாத்மாக்கள் பயங்கரமான நோய்களாலும் துன்பங்களாலும் இறந்துள்ளனர்.”

“இப்படைப்பு இறைவனின் பொழுதுபோக்காகும். ஆனாலும், “ஏன் இப்படிப்பட்ட பொழுதுபோக்கை நீ வைத்திருக்கிறாய்? ஏன் இப்படிப்பட்ட தொல்லைகளை எங்களுக்கு நீ தருகிறாய்?” என்று அவனுடன் சதா இறைஞ்சுகிறேன். படைப்பில் மிக மோசமானவற்றுள் ஒன்று நமது இப்பூலகம். இதைவிட எவ்வளவோ சிறந்த, வாழ்வதற்கான இடங்கள் உள்ளன. ஆனால் தொல்லைகள் இருப்பதை அவன் அனுமதித்தாலும், அவற்றிலிருந்து வெளிவரவும் நமக்கு அவன் உதவுகிறான். இறைவனும் அவனுடைய தேவதைகளும் இலட்சக்கணக்கான நல்ல ஆன்மாக்களும் பூமியில் தம் தெய்வீக இணக்கமான ஒழுங்குமுறையை நிலை நாட்டுவதற்காக முயன்றவண்ணம் உள்ளனர். ஒவ்வொரு நன்மை பயக்கும் குணமும் ஒரு நல்ல ஆத்மாவால் உருவாக்கப்படுகிறது. நல்ல ஆன்மாக்கள் உங்களுடைய மனமாகிய நிலத்தில் உதவவல்ல எண்ணங்களின் விதைகளை இடையறாமல் விதைத்த வண்ணம் உள்ளனர். அதே சமயம் அறியாமையின் அரசனான சாத்தானும் அவனுடைய தீய ஆவிகளுடன் இவ்வுலகில் சீர்குலைவையும் தொல்லையையும் ஏற்படுத்துகின்றது. நோய் கிருமிகளை சாத்தான் அல்லது வேறு யார் படைத்தது? பல வகைப்பட்ட கொள்ளை நோய்களும் அதன்பின்பு காசநோயும் மேலும் தற்போது சமீப காலத்தில் அழிவாகிய புற்று நோயும் இருந்து வருகின்றன. அனைத்தும் மனிதர்களை சித்திரவதைக்குள்ளாக்கும் கொடூரமான முறைகள். ஆனால் நோயை ஒழிக்க புதிய வழிகளைக் கண்டுபிடிக்கும்படி பல ஆராய்ச்சியாளர்களை இறைவன் ஊக்கமூட்டிக்கொண்டிருக்கிறான்.

மனிதனிடம் உள்ள மிருக குணங்கள்.

குருதேவர் அருளுகிறார்: “மற்றவர்களிடம் உள்ள மனோகுணங்களான சத்துவம், ராஜஸம் மற்றும் தாமஸம் இவைகளை கணித்த பின்னர் நீங்கள் அவர்களது தேக நடத்தைகளை ஆராயலாம். சிலர், பெண்கள் ‘பூனை குணம்’ படைத்தவர்கள் என்று கூறுகிறார்கள். ஆண்கள் கூட பூனை குணம் உடையவர்களாக இருக்க முடியும். பூனையானது, சாதுவான மஞ்சள் நிற பறவையை உண்டுவிட்டு தனது வேண்டாத செயலைப்பற்றி ஒன்றும் தெரியாததுபோல் உட்கார்ந்திருக்கிறது. சில மனிதர்கள் மற்றவர்களுடைய அமைதியையும் ஆனந்தத்தையும் குறைப்பதில் சந்தோஷம் அடைகிறார்கள். அவர்களது முழு நோக்கமும் தொந்தரவு செய்வதும் நிலைகுலையச் செய்வதும்தான்; மற்ற பிராணிகளை கொன்று தின்னும் ஓநாய்கள்போல் அவர்கள் சமூகத்தில் சுற்றித்திரிந்து சண்டைகளை நாடுகிறார்கள்.”

“சிலவகை மனிதர்கள் வளவளவென்று கத்தும் ‘ஜே’ பறவைக்கு ஒப்பிடப்படுகிறன்றர் எப்பொழுதும் தொணதொணவென்று பேசிக்கொண்டிருப்பார்கள். ஆண்மகன் முதலில் படைக்கப்பட்டான் என்றும், பிறகு துவாஷ்த்ரீ என்னும் தெய்வம் சந்திரனிடமிருந்து கனிவையும் அன்னத்தின் மார்பிலிருந்து மிருது தன்மையையும், பூக்களிலிருந்து அழகையும் ‘ஜே’ பறவையிலிருந்து ‘வளவள’ ஓசையையும் எடுத்து, இவைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து பெண்ணை உருவாக்கியது என்றும் சொல்லப்படுகிறது. ஆண்மகன் மிகவும் சந்தோஷப்பட்டான். ஆனால் சிறிது காலம் கழித்து த்வாஷ்த்ரீயிடம் சென்று கூறினான். “அவள் ஓர் அழகிய கிருஷ்டி. அவளை நான் உண்மையாகவே பாராட்டுகிறேன். ஆனால் அவள் ஓய்வு ஒழிச்சலின்றி பேசுகிறாள். எனது வாழ்வின் விஷமாகிவிட்டாள். அவளை மீண்டும் எடுத்துக்கொள்ளுங்கள்.” இரண்டு மாதம் கழித்து இந்த மனிதன் மீண்டும் த்வாஷ்த்ரீயிடம் சென்றான். “நான் மிகவும் சோகமாய் உள்ளேன்” என்று அவன் சொன்னான். “தயவு செய்து அப்பெண்ணை என்னிடம் திருப்பித்தந்துவிடுங்கள்.”

ஆனால் சிறிதுகாலம் கழிந்து அவன் மீண்டும் வந்து கூறினான். தயவு செய்து அவளை எடுத்துக்கொள்ளுங்கள். இந்த முறை த்வாஷ்த்ரீ கூறியது, “முடியாது. நீ அவளை வைத்துக்கொள்ளத்தான் வேண்டும்!” பரிதாபமான மனிதன்! அவனால் அவளோடு வாழ முடியவில்லை. ஆனால் அவளில்லாவிட்டாலும் அவனால் வாழ முடியவில்லை.”

“பெண்கள் அவர்களின்

101
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

பங்கிற்கு ஆண்களைப் பற்றி குறை சொல்லாம் . ஆணும் பெண்ணும் ஒருவரது இயல்பை மற்றவர் புரிந்துகொண்டாலன்றி அவர்கள் ஒருவரையொருவர் அறியாமையால் சித்திரவதை செய்து கொள்கின்றனர். இருவரும் இறைவனது பார்வையில் சமமாகப் படைக்கப்பட்டார்கள்;. எந்த ஆணும் பெண் இல்லாமல் வர முடியாது. எந்தப் பெண்ணும் ஆண் இல்லாமல் வர முடியாது. அவரவர்களிடம் ஆதிக்கம் கொண்டுள்ள மற்றும் மறைந்துள்ள குணங்களுக்கிடையே ஒரு சமநிலையை தங்களுக்குள் கொண்டுவருவது பெண் மற்றும் ஆணின் கடமையாகும். ஆண் பெரும்பாலும் விவேகத்தினாலும், பெண் உணர்ச்சியினாலும் வழிநடத்தப்படுகின்றனர். ஒவ்வொருவரும் விவேகம் மற்றும் உணர்ச்சி இவை இரண்டிற்குமான ஓர் உள்ளார்ந்த சமநிலையை எய்த முயன்று, அதனால் ஒரு ‘முழு’ தனித்தன்மை வாய்ந்தவராகவும் ஒரு பூரணமான மனிதராகவும் மாற வேண்டும்.”



குருப்ரியா

“சில மனிதர்கள் கழுதைகள்போல் நடந்து கொள்கிறார்கள். புலனடிமைத்தனத்தின் விளைவுகளால் அவர்கள் எவ்வளவுதான் துன்பம் அடைந்திருந்தாலும் அவர்கள் பிடிவாதமாகத் தங்களது கெட்ட பழக்கங்களை ஊட்டி வளர்த்துக்கொண்டே இருக்கிறார்கள். புலன் இன்ப ஈடுபாட்டின் துன்பமிக்க விளைவுகளை உடனடியாக மறந்து விட்டு, அதனால் தங்கள்அனுபவங்களிலிருந்து எதையும் கறுறுக்கொள்ளாமல் அவர்கள் ஞாபக சக்தியே இல்லாதவர்கள் போல் காணப்படுகின்றனர்.”

“இயற்கையில், வெவ்வேறு விதமான எல்லா மிருகங்களும் வெவ்வேறு உணர்ச்சிகள் மற்றும் குணங்களை வெளிப்படுத்துக்கின்றன. ஆனால் மனிதன் இவை எல்லாவற்றையும் தன்னுள் பெற்றிருக்கிறான். அவன் பாம்பு அல்லது ஓநாய் அல்லது நரி அல்லது சிங்கம்போல் நடந்துகொள்ள முடியும். நம்முள் சொர்க்கம் மற்றும் நரகத்தின் சாரம் உள்ளது. நாம் தெய்வீகப்பண்புகளையே அதிகமாக வெளிப்படுத்த பயிலவேண்டும்.”

எல்லா துன்பங்களுக்கும் காரணமான அறியாமையை சாத்தான் உருவாக்கினான்

ப்ரிய குருதேவர் அருளுகிறார்:

“துன்பம் என்பது இறைவனின் வேலையல்ல; மாறாக, சாத்தானின் சக்தியான மாயை அல்லது மயக்கத்தினுடையது. இந்த சக்தியானது, மனிதர்களை தமது செயல்களுக்கான விளைவுகளை யோசிக்க விடாமல் செய்து அவர்களை தவறிழைக்கத் தூண்டி, இவ்வாறாக தம் மேல் துன்பத்தை வரவழைக்கச் செய்யும் அறியாமையை உற்பத்தி செய்கிறது. ஸ்பெயின் நாட்டில் போர் புரிந்துகொண்டிருப்பவர்கள் அரசாங்கப் படைகளும் சரி, எதிரிப் படைகளும் சரி தாம் சரியான செயலை செய்துகொண்டிருப்பதாக நினைக்கிறார்கள். தவறிழைப்பதைத் தவிர்க்கும் ஒரே வழியானது, எது தவறு என்பதை அறியும் பகுத்தறிகின்ற விவேகத்தை வளர்த்துக்கொண்டு பிறகு அத்தவறைச் செய்யாமலிருக்க உறுதி பூணுவதாகும். ஓர் அநீதி, மற்றொரு அநீதிக்கு எதிராகப் போராடுவது ஒரு நீதி ஆகாது. மனிதனின் உண்மையான எதிரி அறியாமையே. அது இந்தப் பூமியிலிருந்து விரட்டப்பட வேண்டும்.”

“பொற்காலத்தைக்கொண்டுவரத் தேவையயான எல்லாவற்றையும் நாம் இன்று இவ்வுலகத்தில் பெற்றிருக்கிறோம். மனிதனின் சுயநலம்தான் அதை முடியாததாகச் செய்கிறது. தேவையற்ற பயங்கரத் துன்பங்கள் மனிதனின் குறுகிய நோக்குடைய சுயநலத்தால் தோற்றுவிக்கப்படுகின்றன. ஏழை மக்களுக்கு உணவும் உடையும் கொடுக்கச்செய்யவல்ல பணம், மாறாக, அழிவுச் செயலுக்காக செலவிடப்படுகிறது. அறியாமையால் விளைந்த இந்த சுயநலமே உலகின் இன்னல்களுக்கு அடிப்படைக் காரணம். ஒவ்வொரு மனிதனும் தான் சரியானதைச் செய்து கொண்டிருப்பதாக நினைக்கிறான். அவன் தனது நலத்தை மட்டுமே பூர்த்தி செய்ய நாடும்பொழுது, தனது சொந்த மற்றும் மற்றவர்களது மகிழ்ச்சியையும் நிச்சயமாக அழிக்கப்போகும் காரணகாரிய கர்ம நியதியினை (கர்ம வினை என்பது செயல் மற்றும் எதிர் செயலைப் பற்றிய நியதியாகும். தன்னுடைய நடத்தை மூலம் எதையெல்லாம் மனிதன் விதைக்கிறானோ அதையே அதே அளவில் இந்தப்பிறவியிலோ அல்லது வரும் பிறவிகளிலோ அறுவடை செய்கிறான்) செயல்படவைக்க ஆரம்பிக்கிறான்.”

“மனிதனின் அறியாமையால் விளைந்த உலகத்துயரங்களை நாம் அதிகம் பார்க்கப் பார்க்க, ஒவ்வொரு வீதியும் பொன்னால் வேயப்பட்டிருந்தாலும் மகிழ்ச்சியானது நிலைத்திருக்காது என்று எனக்கு மேன்மேலும் தெளிவாகப் புரிகிறது. மகிழ்ச்சியானது மற்றவர்கைள மகிழ்விப்பதில், மற்றவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்க தன் சொந்த நலனைத் தியாகம் செய்வதில் இருக்கிறது.

ஒவ்வொருவரும் அதைச் செய்வாரெனில் அப்பொழுது எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.”

## நுட்பமான பகைவர்கள்

குருதேவர் தொடர்கிறார்: “வனாந்திரமான, முன்பின் தெரியாத தேசத்தை ஆராய்ச்சி செய்வதற்காக புறப்படுவதுபோல் நமக்கு நாமே கற்பனை செய்து கொள்வது எளிது. நாம் கப்பல் மூலம் பிரயாணம் செய்வதானால், நம்முடன் எடுத்துச் செல்ல உயிர்காப்புப் படகு தேவை. கப்பல் மூழ்கிவிட நேர்ந்தால் அந்தப் படகில் ஏறி நம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என நமக்குத் தெரியும். ஆனால் நம் வாழ்வின் பற்பல அனுபவங்களின்போது நாம் எத்தனை முன்னெச்சரிக்கையாய் இருந்த போதிலும், நமது உயிர்காப்புப் படகில் ஒரு கசிவு இருப்பதாகத் தோன்றுகிறது. மிருகங்கள் அதிகமுள்ள வனத்தில் அவற்றிலிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கு நீங்கள் வேண்டிய கவனம் செலுத்த முடியும். ஆனால் நுட்பமான அபாயங்களை வெல்வது வெகு கடினம். ஒருவர் அடுக்கடுக்கான நுண்கிருமிகளிடமிருந்து எப்படி தன்னை காப்பாற்றிக் கொள்வது? எல்லா நேரத்திலும் இலட்சக்கணக்கானவை நம்மைச் சுற்றி மிதந்த வண்ணம் உள்ளன. காணக்கூடிய மற்றும் கேட்கக்கூடிய அபாயங்களுக்கு எதிராக முன்னெச்சரிக்கைகளை எடுக்கும்பொழுது நாம் பாதுகாப்பாக உள்ளோம் என எண்ணுகிறோம். ஆனால் கிருமிகளிடமிருந்து நம்மை காப்பாற்றிக்கொள்வதற்கு நம்மிடம் உள்ள வழிவகைகள் போதுமானவை அல்ல. உங்களுடைய சொந்த இரத்த ஓட்டத்திலுள்ள வெள்ளை அணுக்கள் இந்த உயிரிகளுடன் சதா போராடியவண்ணம் உள்ளன. மருந்துகள் அவற்றை செயலிழக்க மட்டுமே செய்கின்றன. ஆனால், வெள்ளை இரத்த அணுக்கள் அவற்றினுள் சென்று அவற்றை அழிக்கும் போர்வீரர்கள். உங்களுடைய இரத்தம் பலம் குன்றியிருந்தால், இப்போர்வீரர்கள் உங்களுக்கு உதவ முடியாது. சந்தேகப்படமுடியாத அநேகரின் நுரையீரல்களில் கொடுமையான காசநோய் கிருமிகள், தங்களுக்கு இருப்பிடம் தந்துள்ளவர்களை அழிப்பதற்குத் தயாராக மறைந்து கிடக்கின்றன. இயற்கை அவற்றைச் சுற்றி கட்டுப்படுத்தும் மதிலை ஏற்படுத்துகின்றது. ஆனால் சரீரம் அதனுடைய நோய் எதிர்ப்பு சக்தியை பராமரித்துவரும்வரையில் மட்டுமே அது பலனளிக்கக் கூடியது. இந்த உயிர் போராட்டம் அகத்தே உள்ள கண்ணிற்குப் புலப்படாத வாழ்க்கை வனத்தில் எந்நேரமும் நடந்து கொண்டே இருக்கிறது. உங்களுடைய உணவை நீங்கள் ஒரு நுண்ணோக்கியின் மூலம் பார்ப்பீகளானால் அதை உண்ணமாட்டீர்கள். அதனை கிருமிகள் பெரும் விருந்தை அனுபவித்துக்கொண்டுள்ளன, அதே சமயம் நீங்கள் அவற்றை முழுமையாக விழுங்குகிறீர்கள். நீங்கள் அருந்தும் நீரில் இவ்வகையான உயிரிகள் உள்ளன. உண்மையான சைவ உணவு உண்பவர் எவருமில்லை. ஏனெனில் ஒவ்வொருவரும் இலட்சக்கணக்கான கிருமிகளை தினமும் உண்கின்றனர். அப்படியாயின் மனிதன் உண்பதை நிறுத்திவிட வேண்டுமா?”

## நிறைவேற்றப்படாத ஆசைகளின் அபாயம்

குருதேவர் அருளுகிறார்: “நிறைவேற்றப்படாத ஆசைகள் இதயத்துள் தங்கி இருக்கின்றன. அவற்றிற்கு இடம் கொடுத்துவைத்திருப்பதில் என்ன தீமை? இதுதான்; ஒவ்வொரு ஆசையும் நல்ல அல்லது தீய அல்லது இரண்டும் கலந்த குறிப்பிட்ட சக்திகளைக் கொண்டுள்ளது. நீங்கள் இறக்கும்போது தேகம் அழிந்துவிட்டாலும் அந்த சக்திகள் இறப்பதில்லை. இளவ மனோமாத்திரைகளாக உங்கள் ஆத்மா எங்கு சென்றாலும் அதை பின் தொடர்கின்றன. நீங்கள் மறுபிறவி எடுக்கும்போது, அவை நடத்தை சுபாவங்களாக வெளிப்படுகின்றன. இவ்வாறாக, குடிகாரனாக இறந்த ஒருவர், மறுபிறவி எடுக்கும்போது குடியில் ஈடுபடும் மனப்போக்குடையவராக இருக்கின்றார்; குடிப்பதற்கான ஆசையை அவர் வெல்லும்வரை அது அவருடன் தங்கியிருக்கின்றது.”

“மிதமிஞ்சிய ஒரு குழந்தையின் நடத்தைகூட அதன் முற்பிறவியின் குறிப்பிட்ட குணநலன்களை வெளிப்படுத்துகின்றது. சில குழந்தைகள் பயங்கரமான கோபாவேசமுள்ளவையாகவும், இன்னும் சில சிடுசிடுப்பானவையாகவும் இருக்கின்றன. இறைவன் அவர்களை அந்த வகையில் படைக்கவில்லை. சென்ற பிறவிகளில் நிறைவேற்றப்படாத ஆசைகள் அவ்வகை மனோரீதியான சுபாவங்களை ஏற்படுத்தி உள்ளன. இதன் காரணமாக ஆத்மாவானது இறைவன் வடிவத்தில் படைக்கப்பட்டிருந்தாலும், ஏதோ வேறுபட்ட ஒன்றாகத் தோன்றுகிறது. உங்களுக்குள்ளே உள்ள இறைவனின் வடிவம் கோபத்தாலோ அல்லது அச்சத்தாலோ, இந்த வாழ்வில் குலைக்கப்பட்டால், அத்தகைய நடத்தைக் குறைவான குணங்களை இப்பிறவியிலேயே நீங்கள் வெல்லாவிடில் அவற்றுடன் நீங்கள் மறுபிறவி எடுப்பீர்கள்; இனிவரும் ஏதோ ஒரு பிறவியில் அவற்றை நீங்கள் வெல்லும்வரை துன்பம் விளைவிக்கும் இவ்வகையான மனோபாவங்களை சுமக்கவேண்டியவராவீர்கள்”.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# பாழடையும் பரிகார ஸ்தலம் காப்பாற்றப்படுமா?







www.aanmeegamalar.com

மேற்கண்ட ஆலயம் வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஒன்றியத்திற்க்கு உட்பட்ட கம்மசமுத்திரம் கிராமத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் பெயர் அருள்மிகு ஸ்ரீ காமாட்சியம்மன் சமேத ஸ்ரீவிருபாட்சியீஸ்வரர் ஆலயம் ஆகும். ஆலயத்தின் மூலவராக ஸ்ரீவிருபாட்சியீஸ்வரரும், பிரதான தேவதையாக ஸ்ரீகாமாட்சியம்மனும் அருள்பாலிக்கின்றனர். இவர்களோடு விநாயக பெருமானும், பெருமாளும் மற்றும் நந்தியீஸ்வரும் அருள் புரிகின்றனர். மேலும் நவக்கிரக சந்நிதி தனியாக உள்ளது. இந்த ஆலயத்தின் சிறப்பு இராகு, கேது பரிகார ஸ்தலமாகும். இவ்வாலயம் சுமார் இருநூறு ஆண்டுகள் பழமையானது. மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மிகவும் பாழடைந்த நிலையில் இருப்பதால் புனரமைப்பு செய்ய இந்து சமய அறநிலையத்துறையை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது.

– தருமன், வேலூர், போன்: 9597129779


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்




### கடல்கள்

ஔவை. பாட்டி சுட்டி காட்டியுள்ள. கடல்கள். ஏழு ஆகும். அவை 1.உப்பு, 2.தேன், 3.கள், 4.தயிர், 5.பால், 6.கருப்பஞ்சாறு, 7.தண்ணீர் ஆகும்.

### பருவங்கள்

பெண்ணின் பருவங்கள், ஏழு ஆகும். அவை. 1.பேதை, 2.பெதும்பை, 3.மங்கை, 4.மடந்தை, 5.அரிவை, 6.தெரிவை, 7.பேரிளம். (பேரிளம் பெண்). ஆகும்.

### தோற்றங்கள்

உயிர் தோற்றங்கள் ஏழு ஆகும் அவை. 1.தேவர், 2.மக்கள், 3.விலங்கு, 4.பறப்பன, 5.ஊர்வன, 6.நீர் வாழ்வன, 7.தாவரம் ஆகும் (தேவர் என்பது முப்பத்தி முக்கோடி தேவர்கள்)

### முக்தி அளிக்கும் நகரங்கள்

1.காசி, 2.அயோத்தி, 3,மதுரா, 4,மாயாபுரி, (ஹரித்துவார் ) 5.காஞ்சி, 6.உஜ்ஜனி, 7. துவாரகை ஆகும்.

### நதிகள்

புண்ணிய நதிகள் ஏழு., அவை. 1.கங்கை, 2.யமுனை, 3.கோதாவரி, 4.சரஸ்வதி, 5. நர்மதா, 6.சிந்து, 7.காவேரி ஆகும். (சரஸ்வதி நதி, கண்ணுக்கு தெரியாமல் யமுனை நதியின் கீழ் ஒடுகிறது)

### சாகாவரம் பெற்ற சஞ்சீவிகள்

1.ஹனுமன், 2.விபீஷணன், 3.மகாபலி சக்கரவர்த்தி. 4. மார்க்கண்டேயர், 5.வியாசர், 6.பரசுராமர், 7.அசுவத்தாமன் ஆகியோர் ஆகும்.

### தலைமுறைகள்

ஏழு தலைமுறைகள். அவை. 1. தான், 2.தகப்பன், 3.பாட்டன், 4.பெரிய பாட்டன், 5. மகன், 6. பேரன், 7.கொள்ளு பேரன் ஆகியோர் ஆகும்.

### தாள சொற்கள்

தவிலுக்குரிய. தாள சொற்கள் ஏழு அவை.
1.தா, 2.தீ, 3.தொம், 4.நம், 5.கி, 6.ட, 7. ஜம் ஆகியவை ஆகும்

### மேலுலகங்கள்

1.சத்யலோகம், 2.தபோலோகம், 3.ஜனாலோகம், 4.மஹர் லோகம் 5.சுவர்லோகம், 6.புவர் லோகம், 7.பூலோகம் ஆகியவை ஆகும்.

### கீழுலகங்கள்

1.அதலலோகம், 2.விதலலோகம், 3.சுதலலோகம், 4.தலாதலலோகம், 5.மகாதலலோகம், 6. ரஸாதல லோகம், 7.பாதாளாலோகம் ஆகும்.

### வள்ளல்கள்

கடைஏழு வள்ளல்கள் ஏழு பேர் ஆகும் அவர்கள்


கே.ஆர்.ஜி.ஸ்ரீராமன்

1.பாரி, 2.பேகன், 3.காரி, 4.நீலநாகம், (ஆலமர், ஆய்) 5.அதியமான், 6.நள்ளி, 7. ஓரி ஆகியோர் ஆவார்

### திருமலையில்அருள் பாலிக்கும் சிவன் ஆலயங்கள்:

1. கபாலீஸ்வரர், 2. வெள்ளீஸ்வரர், 3. காரணீஸ்வரர், 4.மல்லீஸ்வரர், 5. விரூபாட் டீஸ்வரர், 6.வாலீஸ்வரர், 7.தீர்த்தபாலீஸ்வர் ஆகும்.

www.aanmeegamalar.com

# அனைத்து தோஷங்களை தீர்க்கும் அகத்தீஸ்வரர்

சென்னை வில்லிவாக்கம் அகஸ்தீஸ்வரர் ஆலயம் 500 ஆண்டு கால புராதான சிறப்பு மிக்கது. புராண கால பிரசித்தியும் பெற்றது. கைலாயத்தில் இருந்து தென்னகம் வந்த அகஸ்யர் வழி எங்கும் சிவலிங்களை பிரதிஷ்டை செய்து வழிபட்டார். அவை இன்றும் அகத்தீஸ்வரர் என்ற பெயரில் ஆலயங்களாக எழுந்து காலங்களை கடந்து அருள் வழங்குகின்றன. சென்னை சுற்றியும் சென்னையிலும் அகஸ்தியர் வழிபட்ட பல தலங்களும் திருக்கோயில்களும் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒரு தனி சிறப்புகளைக் கொண்டது.

சென்னையில் அகத்தியர் வழிபட்ட தலங் களில் வில்லிவாக்கமும் ஒன்று. அகஸ்தியர் வழிபட்ட ஈசன் என்பதால் இங்கும் சிவபெருமான், அகஸ்தீஸ்வரர் என்ற பெயரில் மூலவராக இருக்கிறார்.

பரமசிவனுக்கும் பார்வதிதேவிக்கும் மேரு மலைச் சாரலில் திருமணம் நடைபெற்றபோது தேவர்களும், சித்தர்களும், ரிஷிகளும், யோகி களும் மனிதர்கள் மற்றும் சகல ஜிவராசிகளும் ஒரே இடத்தில் கூடியதால் வடக்கு நாழ்ந்து தெற்கு உயர்ந்தது. ஜீவராசி சரிந்து பாதாளத்தில் விழும் அபாயம் ஏற்பட்டது. ஜீவராசி துன்பத்திற்கு ஆளாவதை, அதுவும் தம் திருமணத்தை காண வந்த கண்டு ஜீவராசிகள் துன்பத்திற்கு ஆளாவதை பொறுப்பான ஈசன்.

சம நிலைப்படுத்தும் பொருட்டு குள்ள முனிவரான அகத்தியரை அழைத்து தென் திசை நோக்கி அனுப்பி வைத்தார்.

தென்னகம் வந்த வழியில் அந்நாளில் வில்வவனமாக இருந்த இப்பகுதியில் வாழ்ந்த வில்வலன், வாதாபி என்ற அசுர சகோதரர்களை சந்திக்க நேர்ந்தது.

அந்த அசுரர்கள் அந்த வழியே வரும் முனிவர் களை தந்திரமாக கென்று சாப்பிடுவதை வழக்க மாக கொண்டிருந்தனர்.

அகதியரை கண்டு மகிழ்ந்த அசுரர்கள் அவரை யும் உண்ண திட்டமிட்டனர். அதை உணர்ந்த அகஸ்தியர் அவர்களுக்கு பாடம் புகட்டினார். வாதாபி மாயத்தால் மாம்பழம் ஆக மாறினான். அதை உண்ணுமாறு விருந்துக்கு அகஸ்தியரை அழைத்தான் வில்லவன் . அதை அகஸ்தியர் உண்பார் அவர் வயிற்றுக்குள் மாம்பழமாய் போன வாதாபி சுயஉரு பெற்று அகஸ்தியர் வயிற்றை கிழித்து






அவரை கொல்வான் . பின்னர் இருவரும் அவரை சாப்பிட்டு சந்தோஷப்படலாம் என திட்டமிட்டனர்.

ஆனால் அந்த மாயா மாம்பழத்தை உண்ட அகஸ்தியர் மாம்பழமாய் இருந்த அசுரன் வாதாபியை தன் ஆற்றலால் ஜிரணித்து விட்டார். அதனால் ஆத்திரமடைந்து தன் மீது பாய்ந்த அசுரன் வில்லவனை தன் தண்டத்தால் தாக்கிக் கொன்றார் அகஸ்தியர். அசுரர் பயத்தில் இருந்து அப்பகுதி மக்களும் வழிப்போக்கர்களும் விடுபட்டனர் என்றாலும் அசுரர் கொன்ற தோஷம் அகஸ்தியரை பிடித்துக் கொண்டது.

அசுரர்களை கொன்ற தோஷம் நீங்க ஈசன் அருள் வேண்டி சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டார் அகஸ்தியர். அதுவே இன்றும் அகஸ்தீஸ்வரர் சிவலிங்மாக வில்லிவாக்கம் கோயில் உள்ளது.

அதோடு அகத்தியருக்கு சிவன், அம்பிகை யுடன் காட்சி தந்தபோது அம்பாள் திருமண கோலத்தில் பொன் நகைகள் அணிந் திருந்தாள். எனவே வில்லிவாக்கம் அகத்தீஸ்வரர் கோயில் அம்பாள் ஸ்வர்ணாம்பிகை எனக் கொண்டாடப் படுகிறாள்.

நவக்கிரகங்களில் அங்காரகன் [செவ்வாய்] தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்கத் தீர்த்தம் உண்டாக்கி சிவனை வழிபட்ட தலமும் இதுவே. அதனால் செவ்வாய் தோஷப் பரிகாரத் தலமாவும் வில்லிவாக்கம் திகழ்கிறது. இங்குள்ள தீர்த்தக் கரையிலுள்ள அரசமரத்தடியில் அங்காரகன் காட்சி தருகிறார். ஆடி மாதம் ஐந்து வாரங் கள் தொடர்ந்து செவ்வாய்க்கிழமைகளில் பல்லாயிரக் கணக்கான பெண்கள் திருமணம் நடக்க வேண்டியும் குழந்தை பாக்கியம் வேண்டியும் இங்கே வந்து வேண்டிக்கொள்கின்றனர்.

வீரபத்திரருக்கு இங்கு தனிக்கோவில்உள்ளது. குபேர திசை நோக்கி வீரபத்திரர் அமர்ந்துள்ளதால் ஐஸ்வர்ய வீரபத்திரராக விளங்குகிறார். அகஸ்தீஸ்வரர் கோயிலின் தெற்குவாசல் எதிரே வீரபத்திரர் ஆலயம் உள்ளது. கோரைப் பல்லுடன் இடது கையில் தண்டம் ஏந்திய இவர் அருகே வணங்கிய கோலத்தில் தட்சன் உள்ளார். முன் மண்டபத்தில் பத்திரகாளி சன்னதியும்.உள்ளது.

அன்புடன் தன்னை வந்து அடைந்தார்க்கு அருள்கூட்டும் திருத்தலம் இது. இத்திருத்தலத்தின் சிறப்பை அறிந்து வணங்க வருபவர் களுக்கும், அறியாமலேயே இக் கோவில் இருக்கும் இடத்தின் எல்லையில் கால் பதிப்பவருக்கும் பெரும்பலன் தரும் திருத்தலமாக அறியப்படுகிறது. வில்லிவாக்கம். அகத்தீஸ்வரர் அகஸ்தியருக்கு வழங்கியது போலவே இன்றும் தன்னை வணங்கு பக்தர்களுக்கு எல்லா தோஷங்களையும் நீக்கி சந்தோ ஷங்களை அருள்பவராக விற்றிருக் கிறார்.



மு.ரா.சுந்தரமூர்த்தி

– கவிஞர் மு.ரா.சுந்தரமூர்த்தி

போன்: 9444640437

# சுயம்பாகதோன்றிய சக்கரத்தாழ்வார்




ஸ்ரீமந் நாராயணன் பூலோகத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் காத்து அருள் பாலித்து வருகிறார். அப்படிபட்ட நாராயணன் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்றபடி கலியுகத்தில் அர்ச்சா ஸ்வருபமாக அருள்கிறார்.

ஸ்ரீமன் நாராயணன் பத்து அவதாரங்கள் எடுத்த போது அவரின் பஞ்ச ஆயுதங்களான சங்கு, சக்கரம், அம்புவில், கதை, கத்தி, பெரு மாளுக்கு உறுதுனையாக இருந்தது.

அந்த பஞ்சாயுதங்களில் முக்கியமானது சக்ராயுதமாகும்.

சுவாமி தேசிகனின் சுதர்சனாஷ்டகமும், ஹோட சாயுத ஸ்தோத்திரமும் சொல்லி வந்தால் எளிதில் ஸ்ரீசுதர்சனரின் அருளைப் பெறலாம்.

சக்கரத்தானை "திருவாழியாழ்வான்" என்று போற்றுகின்றனர் ஆழ்வார்கள்.

சுவாமி தேசிகன் இவரை "சக்ர ரூபஸ்ய சக்ரிண" என்று போற்றுகிறார். அதாவது திருமா லுக்கு இணையானவர் என்று பொருள்.

இவ்வளவு பெருமை வாய்ந்த சக்ராயுதம் பெருமாளின் கட்டளைபடி ஸ்ரீசுதர்சனம் என்ற நாமத்தில், சுகமான தரிசனம் கொடுக்கும் பெரு மாளாக, பெருமாளின் அம்சமாகவே கலியுகத்தை காத்து அருளும் பொருட்டு, கடலூர் மாவட்டம் அரிசிபெரியாங்குப்பத்தில் அவதாரம் புரிந்தார்.

இந்தப் பகுதியில் உள்ள மலையின் அரு கில் கடலால் சூழப்பட்ட காலத்தில் சைவ குரவர் அப்பர் கரையேரிய இடம் என்ப தால், இதனை கரையேரிவிட்ட குப்பம் என்று அழைப்பர், இந்த கரையேரிவிட்ட குப்பம் அருகில் திருக்கோயில் அமைந்துள்ளது.

கடல்கள் சூழபட்ட காலத்தில் பெருமாள் மாசிமக சமுத்திர தீர்த்தவாரிக்கு இந்த மலையில் வந்தமர்ந்து பின்தீர்த்தவாரி செய்யும் தருனத்தில் தன்னுடைய பஞ்சாயு தங்களையும், ஆபரனங்களையும் கழற்றி வைத்துவிட்டு தீர்த்தவாரி சென்றுள்ளார்.



ஆர். சதீஷ்,

தீர்த்தவாரி முடித்து திரும்பி செல்லும் காலத்தில் தனது வலது கை ஆயுதமான சக்கரா யுதத்தை உலக நன்மைகருதி இந்த இடத்தில் பதித்து விட்டு சென்றதால், நாளடைவில் அந்த இடத்தில் தானாகவே சுயம்பு உரு கொண்டு ஓர் தூண் வடிவில் நான்கு திசைகளையும் காக்கும் வண்ணம் உருவானவரே ஸ்ரீ சுயம்பு சக்கரத் தாழ்வார்.

அந்த கடல் அலைகளின் சீற்றத்தால் ஹரியின் இடக்கை ஆயுதமான சங்குகள் ஒதுங்கிய குப்பம் (ஹரிசங்கு குப்பம்) இந்தப் பெயர் நாளடைவில் திரிந்து அரிசி பெரியாங்குப்பம் என்று மாறியது.

இவ்வூரில் மட்டுமே மலையின் மீது ஸ்ரீ சக்கரத்தாழ்வார் ஆலயத்தில் மூலவர் சுயம்பு வடிவாக அமைந்து உள்ளார். இந்த எம்பெருமான் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர்.

இங்குள்ள சக்கரத்தாழ்வார் சகல தோஷங்களையும் கஷ்டங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியவர். மாசிமாதம், பரட்டாசி மாதம் சில குறிப்பிட்ட நாட்களில் காலை 06.15 06.28 மணிக்குள் சூரிய பகவான் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் மீது ஒளி வீசுகிறார்.

– ஆர். சதீஷ், கடலூர்
போன்: 9655714283

# தெய்வீகத்தில் நாட்டம் கொண்டால் மனிதர்களுக்கு மகிழ்ச்சி தோன்றும்

உனது உள்ளத்தில் எந்த எண்ணம் கூத்தாடுகிறது என்று சொல். ஆண்டவன் உடனே நிறைவேற்றுவான். அத்தகையோனுக்கே 'ஆனந்த தாண்டவமூர்த்தி' என்றும், 'கனகசபை நடராஜர்' என்றும் பெயர்.

❖❖❖

உனது மனம் குளிக்க வேண்டும். அதற்காக தினம் தினம் ஆண்டவனைக் குளிக்கச் செய். பிறகே ஆண்டவன் உன்னைப் பார்ப்பான். நீயும் அவனைப் பார்ப்பாய்.

❖❖❖

மனம் குளித்தால் புத்தி குளிக்கும். புத்தி குளித்தால் சிந்தனை குளிக்கும். பிறகு மனித வாழ்க்கையே திருமஞ்சனம்தான்.

❖❖❖

மனிதனின் எடை பக்தியே. அதைப் பார்த்த கடவுள் பக்தனை மதிக்கிறான்.

❖❖❖



பக்தி எடை அதிகமாக கூடக்கூட பக்தனின் பக்தி வெறி அதிகமாகிறது.

❖❖❖

உலக வாழ்க்கையையே சிந்தித்துக் கொண்டிருந்தால் மனிதனுக்கு மனிதன் சண்டை வரும். தெய்வீகத்தில் நாட்டம் கொண்டால் மனிதர்களுக்கு மகிழ்ச்சியே தோன்றும்.

❖❖❖

கவனிக்கும் மனிதனின் மூளைக்குள் உலகம் உடனே புரிந்துவிடும்.

❖❖❖

கொக்கின் மூக்கிற்குள் பிடிபட்ட மீன் செல்லும் போது செத்துவிடும். அதற்கே கொக்குக்கு மூக்கு நீளமாக உள்ளது. இது போல் நீ ஆண்டவனின் முன் துன்பத்தைச் சொல்ல ஆரம்பிக்கும் பொழுதே அது தீர்ந்துவிடுகிறது.

❖❖❖

வருடத்துக்கு வருடம் மூளையின் மதிப்பைக் கூட்டிக் கொண்டு போகின்றவனே மனிதன்.

❖❖❖

மனிதன் ஆண்டவனை நினைக்க நினைக்க அவனுக்கு அருள் கூடிக் கொண்டே போகும்.

❖❖❖

எல்லா உணர்வுகளையும் சரியாகப் பார். சரியாகவே தெரியும். இதற்கே நவரசம் என்று பெயர்.

❖❖❖

சரியாக மணி பார்ப்பதைப் போன்று, சரியாக பக்தி செய்.

❖❖❖

மிகத் தெளிவாகவே ஆண்டவனை அங்க

www.aanmeegamalar.com

அடையாளங்களுடன் பார்த்துவிடலாம்.

❖❖❖

வேளாண்மை சிறக்க, நல்ல இடு பொருள் என்ற விதை தேவை. சமுதாயத்தின் ஒவ்வொரு துறையும் சிறக்க, ஒவ்வொரு மனிதனும் ஒரு அற்புதமான இடுபொருளே.

❖❖❖

கடவுள் பக்தி சர்க்கரையைப் போன்றது. இதை வாழ்க்கையுடன் சேர்த்துக் கொண்டால் இனிப்பாக காப்பி சாப்பிட்டதைப் போன்று இருக்கும்.

❖❖❖

கிளி ஜோஸ்யம் பார்த்துக் கொண்டிருந்த கிளி தப்பி ஓடினால் பார்த்துப் பிழைக்க முடியுமா? அதுபோல் மனிதனுக்கு தெய்வீகம் ஒன்றே உயர்வளிக்கும்.

❖❖❖

உனது கண் என்னும் கர்மேந்திரியம் மிகமிகக் கூர்மை என்றால், உனது சிந்தனையும் கூர்மை என்று பொருள். இத்தகைய மனிதன் மேதையாக இருப்பான்.

❖❖❖

மரம், செடி, கொடி, புல், பூண்டு இவைகள் உலகின் இயற்கை அழகு. அவைகளுக்கு பூத்துக் காய்த்து விதைவிட்டு பரம்பரையை வளர்ப்பதே அழகு ஆகும்.

❖❖❖

உனது கண்களை நீ சிறப்பாக எண்ணுவாயானால், சிறப்பான உருவங்களில் ஆண்டவன் உனக்குத் தரிசனம் தருவான்.

❖❖❖

உனது காதுகள் கூர்மையாகிவிட்டது என்று சொன்னால், பேசிக்கொண்டிருக்கும் முட்டாள்களையும் பேசாத முட்டாள்களையும் உனக்கு இனங்கண்டுகொள்ளத் தெரியும்.

❖❖❖

உனது காதுகளை நீ சிறப்பாக எண்ணுவாயானால், ஆண்டவன் உன்னை மிகப் பெரிய பேச்சாளி ஆக்கிவிடுவான்.

பொருளைப் பேசு. பொருளை பொருள்பட எடுத்துக் பேசுவதே “வாய்” எனப்படும். இது ஒவ்வொருவரிடமும் இருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள்.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

# குழந்தையில்லா தம்பதியருக்கு இறுதி சடங்கு செய்த

# சுருளி வேலப்பர்

மதுரையில் இருந்து தேனி வழியாக சுமார் 70 கிலோ மீட்டர் தொலைவில் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் அமைந்துள்ளது சுருளி மலை.

ஆண்டு முழுதும் நீர் வற்றாமல் கொட்டிக் கொண்டிருக்கும் சுருளி அருவி தென்னிந்தியா அளவில் மிகவும் பிரசிதிபெற்றது. இவ்வளவு நீர் எங்கிருந்து உற்பத்தியாகிறது என்பது இன்று வரை யாரும் கண்டறியாத மர்மம் தான். கொட்டும் அருவியின் ஒரு சில மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கைலாச நாதர் குகை உள்ளது.

சித்தர்களும், தவமுனிவர்களும் ரிஷிகளும் சதுரகிரி மலையில் இறைவனை நோக்கி தவம் புரிய அதனைக் கண்டு மனம் மகிழ்ந்த சிவபெருமான் தவம் செய்த சித்தர்களுக்கும், ரிசிகளுக்கும் தேவ லோக வாழ்வைக் கொடுத்தருளிய இடம் இது தான்.

இந்த மலை மீது கன்னிமார்கள் நடனமாடிய தடயங்கள் உள்ளன என்றும் குன்று இருக்கும் இடம் எல்லாம் குமரன் இருக்கும் இடம் என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கூறி, மலைக்கோவில்களை “குன்று தோறாடல்” என்று பெயரிடுகிறார். சுருளி வேலப்பர் சுயம்புவாக தோன்றி, குடவரை சன்னதியில் அருள் பாலிக்கிறார்.அவர் அருகில் விநாயகர்,மகாலிங்கம், சந்தான கிருஷ்ணன், வீரபாகு, ராமபிரான், லட்சுமணன் ஆகியோர் உள்ளனர். இம்மலையில் இன்றும் சித்தர்கள் வாழ்வதாக கூறுகின்றனர்.

சுருளி மலையைச் சுற்றி சுமார் 225




www.aanmeegamalar.com

குகைகள் உள்ளதாக கூறப்படுகிறது. இவற்றில் ரிஷிகள், தேவர்கள், சித்த புருஷர்கள் ஆகியோர் தவமிருந்துள்ளனர். இவற்றில் விபூதி குகை, சர்ப்ப குகை, கிருஷ்ணன் குகை, கன்னிமார் குகை என முக்கியமான குகைகள் பொதுமக்களின் பார்வையில் தென்படக்கூடியது. பிற குகைகள் அடர் வனத்திற்கு உள்ளே, யாரும் காணாத படி அமைந்துள்ளது.

சுருளி அருவியில் அமைந்துள்ள பிரசிதிபெற்ற தலங்களில் ஒன்று சுருளி வேலப்பர் கோவில். தேனி மாவட்டம், கம்பம் சுருளி மலையில் ஒரு குகையின் மீது அமைந்துள்ள முருகபெருமான் திருக்கோவில் இது.

இதன் அருகில் சுரபி நதி ஓடுகின்றது. இங்குள்ள அதிசயம் என்னவென்றால், இங்குள்ள விபூதிக்குகையில், மணல் ஈரம் பட்டு காய்ந்த பின்பு விபூதியாக மாறுகிறது. இந்த இடத்தில் உள்ள ஒரு மரத்தின் மீது தொடர்ந்து நீர் கொட்டி அது காய்ந்த பின்பு பாறையாக மாறியது. மேலும் இந்த நீர் பட்ட இலை, தழைகள் தொடர்ந்து 40 நாட்கள் நீரில் நனைந்த பின்னர்,பாறையாக மாறுகிறது. எவ்வளவு நாட்களும் நீர் இங்குள்ள பாறைகள் மீது விழுந்து கொண்டிருந்தாலும் பாசம் பிடிக்காது, வழுக்கும் தன்மை இல்லாமலும் இருப்பது அதிசயம் ஆகும். இங்குள்ள நீர் வீழ்ச்சி இசையோடு இணைந்து சுருதி கொடுத்ததால், சுருதி தீர்த்தம் அழைக்கப்பட்டு, பின்னர் மருவி, சுருளி தீர்த்தம் ஆனது. இங்குள்ள முருகபெருமானும் பழனி மலையில் இருப்பது போன்று ஆண்டிக்கோலத்தில் காட்சி அளிப்பதால் இத்தல எம்பெருமான் சுருளியாண்டி என்று அழைக்கப்படுகிறார்.

மஹாவிஷ்ணுவின் மகளான வள்ளியை மலைஅரசனான நம்பிராஜன் வளர்த்து, முருகபெருமானுக்கு மணம் முடித்து வைத்தார். திருமணத்திற்கு பின்னர், முருகனுக்கு தனக்கு




சொந்தமான இந்த மலைப்பகுதியை திருமண சீராக அளித்தார். எனவே இந்த தலத்திற்கு வந்து அருளினார்.

ஒருசமயம், சனி பகவான், தனது நியமனப்படி, தேவர்களை ஆட்கொள்ளவேண்டி வந்தது. தேவர்கள் அனைவரும் முருகனை சரணடைந்து, வழிபட, சனியின் பிடி அகன்றது. சிவபெருமானிடம் இலங்கையை ஆண்ட ராவணேஸ்வரன் தனது தவ வலிமையினால் அண்ட சராசரங்களையும் ஆளும் வரம் பெற்றான். அதன் பின்னர் தேவர்களையும் ரிஷிகளையும் சித்தர்களையும் வதைத்தான். அனைவரும் இங்குள்ள கைலாசநாதர் குகையில் அருள்புரியும் மஹாவிஷ்ணுவிடம் சரணடைந்து காத்து அருள வேண்டினர். இதற்குள் ராவணன்

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்






www.aanmeegamalar.com

தனது படையுடன் இங்கு வந்து கூச்சலிட மஹாவிஷ்ணு பஞ்ச பூதமாய் உருவெடுத்து விண்ணுக்கும் மண்ணுக்கும் பெரிய உருவெடுத்து கோப நிலை காட்ட, இதைக்கண்டு நடுங்கி தன் படைகளுடன் திரும்பி ஓடினான். இத்தகைய பெருமை வாய்ந்த கைலாசநாதர் குகையின் மேற்பகுதியில் சுருளிவேலப்பன் அருள் பாலிக்கிறார்.

முருகன், சுருளிவேலப்பன் சன்னதியில், சிவன், விஷ்ணு, விநாயகர் அனைவரும் காட்சி தருவது சிறப்பான அம்சமாகும். இம்மலையில் அனைத்து தெய்வங்களும் வசித்து வருவதாக ஐதீகம். ஆதலால் ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனி சிலைகள் உள்ளன. ஆடி அமாவாசை, தை , புரட்டாசி, மஹாளய அமாவாசை தினங்களில், இங்கு நீராடி, முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து விசேஷ பூஜைகள் செய்கின்றனர்.

குழந்தை இல்லாத பக்தர் ஒருவருக்கு சுருளி வேலப்பரே மக னாக வந்து இறுதிச்சடங்குகள் செய்து முடித்தாராம். எனவே ஆண் வாரிசுகள் இல்லதவர்களும் இறுதி வேளையின் போது இவரை தங்கள் மகனாக பாவித்து வழிபட மன அமைதியும் வளமும் கிடைக்கும்.


ராஜாமணி

இங்கு பெருமாள் சன்னதியில் சிவபெருமானும் இருப்பது ஹரியும் சிவனும் ஒன்றே என்ற தத்துவத்தை உறுதிப்படுத்துகிறது. விபூதி, குங்கும பிரசாதமும் தருகின்றனர். அத்துடன் சடாரி ஆசீர்வாதமும் செய்கின்றனர். துளசி தீர்த்தமும் வழங்கப்படுகிறது. இது உச்சிக்கால பூஜையில் மட்டும் கொடுக்கப்படுகிறது.

இங்கு பெருமாளுக்கு பரிவார மூர்த்தியாக நரசிம்மரும் சிவபெருமானுக்கு பரிவார மூர்த்தியாக தட்ஷிணாமூர்த்தியும் (சின்முத்திரையுடன்) இருக்கின்றனர். சிவபெருமானாருக்கு விசேஷ அபிஷேகங்கள் உண்டு. பால்குடம் எடுத்து முடி காணிக்கை செலுத்தி, தீர்த்த நீராடி, வழிபட, சகல பாவங்களும் நீங்கும். நல் வாழ்வு கிட்டும். தீராத வியாதி தீரும் என்பதும் நம்பிக்கை ஆகும். இங்கு அன்னதானம் செய்தால், நற்கதியும் மோட்ஷமும் கிட்டும் என்பதால், அன்னதானம் பிரதானமாய் நடைபெறுகிறது.

– ராஜாமணி
செல்: 9487934050



## மனம் பாரமாக இருக்கும் சமயத்தில்

# வேலை நினையுங்கள் பாரம் குறையும்

முருகனின் வேலுக்கு அப்படி என்ன சிறப்பு..!!

நாம் வணங்கும் தெய்வங்கள் பெரும்பாலா னவை ஆயுதம் ஏந்திய தெய்வங்களே. அந்த வரிசையில் காவல் தெய்வங்கள். பார்வதி, சிவ பெருமான் மற்றும் முருகன் ஆகிய தெய்வங்களை குறிப்பிட்டு சொல்லலாம்.

முருகன் என்றாலே நம் நினைவிற்கு வருவது மயிலும், வேலும் தான். புராணங்களின் படி அதிக முக்கியத்துவம் வாய்ந்த மிக முக்கியமான ஆயுதமாக முருகனின் வேல் கருதப்படுகிறது.

வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பய மில்லை" என்பதே தொன்று தொட்டு சொல்லும் கூற்று. முருகனுக்கு இந்த வேலினால் வேல் முருகன் என்ற பெயரும் உண்டு.

சூரபத்மன் எனும் அரக்கனை அழிக்க தேவி பார்வதி தன்னுடைய சக்திகள் அனைத்தையும் திரட்டி வேலை வடிவமைத்து, அதனை கொண்டு சூரனை வதைக்க சொன்னதாக புராணங்கள் கூறுகின்றன. அதாவது வேல் என்பதே சக்தியின் அம்சம். அதனாலேயே வேலிற்கு சக்தி வேல் என்ற பெயரும் உண்டு.

முருகனின் வேலுக்கு அப்படி என்ன சிறப்பு!

"வெல்" என்ற வினைச்சொல்லே நீண்டு 'வேல்" என்ற பெயர்ச்சொல் ஆகிறது. ஆகவே, வேல் என்றால் வெற்றி என்று பொருள்படும்..

பராசக்தியின் வடிவமே வேலாயுதம் என்பார் கள். அறிவு, ஞானம், பொருள், இன்பம், திரு வருள், திருவருட்சக்தி முதலிய சொற்கள்வேலின் உருவமாக உள்ள பராசக்தியையே குறிப்பனவாகும்.

முருகப்பெருமானுக்கே உரிய ஞானசக்தி வேலாயுதம். வெல்லும் தன்மையுடையது வேல். தன்னை ஏந்தியவருக்கு நிச்சயம் வெற்றியைத் தருவதால், அதற்கு 'வெற்றிவேல்" என்ற பெயரும் உண்டு.

வேல் உணர்த்துவது என்னவென்றால்... வேலின் அடிப்பகுதி ஆழமாகவும், இடைப்பகுதி விசாலமாகவும், நுனிப்பகுதி கூர்மையாகவும் திகழ்கிறது.

வேலைப்போன்று அறிவானது கூர்மையான தாகவும், அகன்றும், ஆழமாகவும் இருக்க வேண் டும் என்பதையும் உணர்த்துவதாக இருக்கிறது.

முருக வழிபாட்டில் தொன்மை வாய்ந்தது வேல் வழிபாடு. இன்றும் பல முருகன் கோவில் களில் வேலுக்கு மட்டுமே பூஜை செய்து கொண் டிருக்கின்றனர்.

வேல் வழிபாட்டின் எளிமைப்படுத்தப்பட்ட நவீன வடிவமே சக்திவேல் வழிபாடு. சக்திவேலை வணங்குவது என்பது அன்னை பராசக்தியையும், தனயன் முருகனையும் ஒருசேர வணங்குவதாகும்.

மனம் பாரமாக இருக்கும் நேரங்களில் மனதுக்குள் சக்திவேலை நினைத்துக் கொண்டு 'ஓம் ஐம் ஹ்ரீம் வேல் காக்க" என்று சொன்னால்; மனம் லேசாகி விடும்..!

www.aanmeegamalar.com

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்





















# சிவன் லிங்க வடிவெடுத்த நாளே

# மகாசிவராத்திரி

இருளும், அழிவும், பிரளயமும் ஏற்பட்டால் அங்கு சிவனது அம்சம் இருக்கிறது என்பது பொதுக் கருத்து. அதனால் ஒவ்வொரு இரவும் சிவனுடைய ராத்திரிதான். தினந்தோறும் பகல் மடங்கியபின், உயிர்களை உறங்கவைக்கும் இரவாக வருவது நித்ய சிவராத்திரி எனப்படும்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளுக்கும் ஒவ்வொரு பொறுப்பு இருக்கிறது. அவர்களுள் சிவனது பொறுப்பில் வருவது இறப்பு போன்ற உறக்கம்.

அதே போல் உயிர்களை விழிக்கச் செய்யும் நேரம் பிரமனது தொழில் சுறுசுறுப்பாக நடைபெறும் நேரம். உயிர்கள் தத்தம் கடமைகளையும், செயல்களையும் செய்யும் நேரம், காக்கும் தெய்வமான விஷ்ணுவின் நேரம்.

இதன் அடிப்படையில்தான் நம் முன்னோர் நாளைப் பகுத்துள்ளனர். விடிகாலை 4 மணி முதல் 8 மணி வரை (1 மணி = 1 ஓரை = 2 1/2 நாழிகைகள்) உள்ள நேரம் நான்முகப் பிரமன் செயலாற்றும் நேரம். அந்நேரத்தில் செய்யும் நியமங்கள் சத்துவத்தை அதிகப்படுத்துவன. அந்நேரத்தில் உட்கொள்ளும் உணவு சுறுசுறுப்புக்கும், உடல், மன வளர்ச்சிக்கும் உதவுவதாக அமையும்.

காலை 8 மணி முதல் முன்மாலை 4 மணி வரை விஷ்ணுவின் நேரம். இந்த நேரத்தில் உடலும், உள்ளமும் நன்கு உழைத்து, செயலாற்ற ஒத்துழைக்கும்.

மாலை 4 முதல் இரவு 8 மணி வரை மீண்டும் பிரமனின் நேரம். பிரமன் தொழிலாக, மீண்டும் உடல் மற்றும் மனதின் புத்துணர்வுக்கு ஓய்வும், உணவும் உடலில் ஒட்டும் நேரம் இது.

இரவு 8 மணிக்குள் உணவை முடித்துக் கொள்வதுதான் நல்லது. அதன் பிறகு, இரவு 8 மணி முதல், காலை 4 மணி வரை சிவனது நேரம். செயல்பாடுகள் நின்று, இறப்பு போன்ற தூக்கத்தில் அமிழும் நேரம் அது.

நம் உடலுறுப்புகளின் செயல்பாடும் இப்படியே மூன்று தெய்வங்களது செயல்பாட்டினை ஒட்டியே

மகா சிவராத்திரி தினத்தில் குறைந்தபட்சம் ஒரு வில்வ இலையாவது சிவனுக்கு நாம் அர்ச்சித்து வழிபடுவது நல்லது. இது முன் வினையையும், இந்த பிறப்பின் வினையையும் அறுக்கும் வல்லமை வாய்ந்தது. சிவனின் துதியும், சிவ ஆராதனையும் அனைத்து நன்மைகளையும் தடக் கூடியது.



அமைவதால், ஒவ்வொரு மனிதனின் உடலிலும், மூன்று தெய்வங்களின் அம்சமும் உள்ளன. ஒவ்வொரு மனிதனும் மூன்று தெய்வங்களின் அருளால் ஒவ்வொரு நாளும் மூன்று நிலைகளில் சுற்றிக் கொண் டிருக்கிறான். அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இதை உணர்ந் தாலும் உணராவிட்டாலும் மூன்று தெய்வங்களும் அவன் உடல், மன நிலைகளை மேற்பார்வை பார்க்கும் வேலையைச் செய்து கொண்டுதான் இருக்கின்றன.



கீதா–ராஜன்

✪ ✪ ✪

உலகிற்கு ஆதாரமான சிவபெருமான்உலக உயிர்களை படைத்தலும், படைத்த உயிர்களை காத்தலும், காத்த உயிர்களை தன்னுள் ஐக்கியப் படுத்திக்கொள்ளுதலும் இந்த நாளில்தான் நடக்குமென்கிறது நம் புராணங்கள். இதனை லயக்ரம ஸ்ருஷ்டி தினம்' என்பர். 'லயம்" என்றால் ஒடுக்குதல். ஸ்ருஷ்டி என்றால் 'படைத்தல்'.

## முடியாதவர்கள் 1 மணிவரை கண் விழித்தால் நலம்

சிவராத்திரி தினத்தில் இரவில் தான் மிகுந்த விஷேசம். மாலை நாம் நம் பூஜை அறையில் உள்ள சிவ லிங்கத்திற்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபடலாம். அப்படி இல்லாதவர்கள் அருகில் உள்ள சிவன் கோயி லுக்கு சென்று அங்கு நடக்கும் அபிஷேக ஆரா தனையில் கலந்து கொள்ளலாம்.

அங்கு சிவனின் நாமத்தை சொல்லி வழிபடுவது அவசியம். உடல் நலத்தில் முடியாதவர்கள் குறைந்தபட்சம் அன்று இரவு 1 மணி வரையாவது கண் விழித்து சிவனை வழிபட வேண்டியது அவசியம்.

அதாவது படைத்தலுக்கும், அழித்தலுக்குமான விழாவே "மகா சிவ ராத்திரி" ஆகும்.

✪ ✪ ✪

மகா சிவராத்திரி நாளில் விரதம் அனுஷ் டியுங்கள். ஆயுள் பலம் கூடும். ஆரோக்கியம் அதி கரிக்கும். இல்லத்தில் ஐஸ்வர்யம் குடி கொள்ளும்.

✪ ✪ ✪

சிவனை மகாசிவன் என்று அழைப்பது இல்லை. அதே சமயம் சிவராத்திரியை 'மகா' எனும் அடைமொழியுடன் அழைக்கிறோம். இதில் இருந்தே இந்த இரவின் மகிமையை அறியலாம். அதே போல், ஈசனை சதா சிவன் என்று சொல்கிறோம். வேறு எந்த தெய்வத்தையும் 'சதா' சேர்த்துச் சொல்வதில்லை. 'சதா' என்றால் 'எங்கும் எப்போதும்' என்று அர்த்தம். எங்கும் எதிலும் நிறைந்திருப்பவன் ஈசன்.

✪ ✪ ✪

## அறிவியல் ரீதியாக சிவராத்திரி

சிவராத்திரி என்றால் என்ன எதுக்கு சிவனை இன்னிக்கு கும்பிட னும்..? என்று கேட்பவர்களுக்கு...

சிவன் என்பது நம் ஆத்மா வடிவம்... அண்டத்துலஇருக்குறது பிண்டத்துலயும் இருக் குன்னு சொல்றாங்களே அந்த அண்டத்தில் ஒரு மாறுதல் வரும் போது இந்த பிண்டத்திலும் அந்த எதிரொலி இருக்குமே?

ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நாளில் அண்டத்தில் உள்ள கதிர் அலைகளின் தாக் கத்தால் நம் உடலில் உள்ள சுரப்பிகள், அமிலங்கள் வெளியேற்றத்தில் மாறுபாடு அடைகின்றன. அச்சமயம் உறங்காமல் விழித்திருந்தால் அவற்றின் செயல்பாடு நம் ரத்த அணுக்களை பாதிக்காது... கண்டதையும் அச்சமயம் சாப்பிடாமல் எளிதில் ஜீரணமாகும் உணவுகளை மட்டும் குறைந்த அளவில் சாப்பிட்டு சிவனை வணங்குவது நல்லது.

இதெல்லாம் விளக்கி சொன்னா எல்லோருக் கும் புரியாது அழகா ஒரு கதை சொல்லி, கொஞ்சம் பயம் காட்டி, மறைபொருளா வெச் சிருக்காங்க. ஆனா இதில் ஏதோ நம்மை நல்வழிப்படுத்தும் விசயம் இருப்பது மட்டும் உண்மை சிவனை கும்பிடலைன்னா தியானம் செய்யுங்க. அப்படியே தூங்கிடாதீங்க. சித்தர்களை வழிபடுங்க. எங்காவது மனம் அமைதி அடையும் இடத்தில் தனிமையில் இருங்க...ஆற்றங்கரை, குளக்கரை, மலை, கடற்கரை, என எங்கெல்லாம் போனா உங்க மனம் சாந்தி அடையுதோ அதெல் லாம் சிவரூபம்தான்!!

✪ ✪ ✪

## முன்னேற்றம் தரும் மாத சிவராத்திரி

சிவராத்திரி என்பதில் சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் இன்பம் என்று பொருள் கொள்ளலாம். மாதந்தோறும் அமாவாசை நாளில் இருந்து

www.aanmeegamalar.com

வரும் 14வது திதியன்று சிவராத்திரி அல்லது பிரதோஷ நாட்களாகக் வழிபடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மாதமும் கிருஷ்ணபட்ச தினத்தை இந்த தினமாகக் கடைபிடிக்கிறோம்.

இந்த நாளில் சிவன் கோவில்களுக்கு சென்று வழிபட்டால் வாழ்க்கையில் முன்னேற்றம், தீய சக்திகள் வேரோடு அகலுதல் போன்ற நன் மைகள் உண்டாகும்.

✪ ✪ ✪

## அம்பிகையால் உருவான மகாசிவராத்திரி

ஒருமுறை பார்வதிதேவி விளையாட்டாக சிவபெருமானின் இரண்டு கண்களையும் மூடினாள், உலகுக்கு ஒளி வழங்கும் சூரிய சந்திரர்களான அவருடைய கண்கள் மூடப்பட்டு எங்கும் காரிருள் சூழ்ந்தது.

உலகம் கலங்கி தன்நிலையிழந்தது. உடனே பெருமான் நெற்றியில் உள்ள அக்னிமயமான மூன்றாவது கண்ணைத் திறந்தார். இந்த நெருப்புச் சுவாலைகள் தெரிக்கும் கண்ணொளி கண்டு அனைவரும் மேலும் பயந்தனர்.

அப்போது உமையவள் பரமேஸ்வரனைத் தொழுது பணிந்தாள். நான்கு ஜாமங்களிலும்




### மகா சிவராத்திரி கற்பம்

மகா சிவராத்திரி கற்பம் என்பது வேறு ஒன்றும் அல்ல, அது ஒரு நூல். 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீன சீடர் மறைஞான சம்பந்தரால் எழுதப்பட்ட நூல்களில் ஒன்று தான் "மகா சிவராத்திரி கற்பம்". மகத்துவம் வாய்ந்த மகா சிவராத்தரி அன்று சிவனை வழிபடும் முறைகள் எவை, இந்த விரதமிருந்து சிவனை வழிபடுவதால் பெறும் பேறுகள் எவை, இந்த நாளில் நோன்பிருந்து பேறு பெற்றவர்கள் இன்னின்னார் என்னும் கதைகள் முதலானவை இந்த நூலில் கூறப்பட்டுள்ளன. இந்த நூல் 39 குறட்பாக்களைக் கொண்ட ஒரு சிறு நூல் ஆகும். அக்காலத்தில் சிவராத்திரி விரதத்தின் போது இந்த மகா சிவராத்திரி கற்பத்தை குழந்தைகளுக்கு படித்து காண்பித்தனர் முன்னோர்கள்.

இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள். பூஜையின் முடிவில் அம்பிகை வழிபட்ட நாளை மகா சிவ ராத்திரியாக கொண்டாட வேண்டும் என்று வேண்டினாள்.

மகா சிவராத்திரி தினத்தில் சூரியன் மறைந்தது முதல் மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை தங்களை சிவன் பூஜை செய் பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எல்லா விதமான பாக்கியங்களையும் தந்து முடிவில் மோட்சத்தையும் அளிக்க வேண்டுமென்று அருள் புரியுங்கள் என்று அன்னையானவள் வேண் டிக்கொண்டாள். சிவபெருமானும் அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள் புரிந்தார். அந்த இரவே சிவராத்திரி என வழங்கப்பட்டு அனைவராலும் கொண்டாடப்படுகிறது.

✪ ✪ ✪

## வாழ்வு செழிக்கும்

சிவனாரை வழிபட்ட பார்வதி தேவி இந்த நாளில் நான் எவ்வாறு தங்களை வழிபட்டேனோ அந்த முறைப்படி தங்களை வழிபடுபவர்களுக்கு இம்மையில் செல்வமும் மறுமையில் சொர்க்கமும் இறுதியில் மோட்சமும் தரவேண்டும் என்று பரம னிடம் வேண்டிக் கொண்டாள்.

அப்படியே ஆகுக எனச் சிவபெருமானும் அருள்பாலித்தார், அதன்படியே சிறப்புற அனுஷ்டிக் கப்படுகிறது மகா சிவராத்திரி.

புராணங்கள் போற்றும் மகா

சிவராத்திரி தினத்தில் உடலையும் உள்ளத்தையும் பரிசுத்த மாக்கி விரதம் இருந்து முழுக்க முழுக்க சிவ னாரிடம் மனம் லயித்திருந்து இரவு கண் விழித்து நான்கு காலமும் சிவவழிபாடு செய்யவேண்டும்.

இதனால் துன்ப இருள் அகன்று சிவஜோதி யின் அனுக்கிரஹத்தால் நம் வாழ்வு செழிக்கும்.

✪ ✪ ✪

## சிவன் லிங்க வடிவெடுத்த நாளே மகாசிவராத்திரி

ஆதியும் இல்லாத, அந்தமும் இல்லாத அருட் பெரும் ஜோதியனாய், பிரம்மாண்டமாக லிங்க வடிவெடுத்து வெளிப்பட்ட நாளே மகாசிவராத்திரி.

முறைப்படி விரதம் இருந்து சிவபெருமானை வழிபட்டால் சகல வளங்களையும் பெற்று வாழ்வில் மகிழ்ச்சியாக வளமாக வாழ முடியும்.

✪ ✪ ✪

✪ ✪ ✪

## பலனை தரும் சிவராத்திரி

இந்த நாளில் விரதம் இருந்து, விடிய விடிய கண் விழித்து, நான்கு கால பூஜையையும் தரிசிப்பவருக்கு முக்தி தரவேண்டும் என பார்வதி தேவி ஈசனிடம் கேட்க, அப்படியே ஆகட்டும் என வரம் தந்தருளினார் ஈசன். எனவே, மற்ற நாளைவிட, மகா சிவராத்திரி நாளில் செய்யப்படும் பூஜை பன்மடங்கு பலனைத் தந்தருளும் என்பது ஐதீகம்!

✪ ✪ ✪

## மூன்று கோடி சிவராத்திரி பலன் தரும் சோமாவர சிவராத்திரி

திரியோதசி முன் இரவு வரை இருக்க, நடு இரவில் சதுர்த்தி வந்தால் அது மிக விசேஷம். அது உத்தம சிவராத்திரி என அழைக்கப்படுகிறது. சூரிய உதயம் முதல் மறுநாள் வரை சதுர்த்தசி இருப்பது மத்ய சிவராத்திரி. முதல் நாள் இரவில் நிசி நேரத்தில் சதுர்த் தசி நேராமல் மறுநாள் இரவு நிசி நேரத்தில் சதுர்த்தசியும், அமாவாசையும் சந்திப்பது அதம சிவராத்திரி. சோமவாரத்தில் வரும் மகா சிவராத்திரி விரதத்திற்கு மூன்று கோடி சிவராத் திரி விரதம் இருந்த பலன் கிடைக்கும்.

✪ ✪ ✪

## புண்ணியம் செய்தால் மட்டுமே விரதத்தை கடைபிடிக்கமுடியும்

சிவராத்திரியில் சிவ தரிசனத்தைக் காண புண்ணியம் செய்திருக்க வேண்டும். குறிப்பாக, விரதம் மேற்கொண்டு சிவனாரைத் தரிசிப்பது இன்னும் பலன்களை வழங்கும் என்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள்!

✪ ✪ ✪

## சிவனருள் கிடைக்கும்

இரவில் தூங்காமல் சிவ நாமம் கூறி, சிவ கதைகளைக் கேட்டு நான்கு ஜாமங்களிலும் பூஜை செய்தால், சிவனருள் கிடைக்கப் பெறலாம்.

✪ ✪ ✪

## சிவ சிவ என்று கூறிய அசுரர்களுக்கு சாப விமோசனம்

சிவராத்திரி தின பூஜையைக் கண்ட அசுரக் கூட்டம் தங்களையும் அறியாமல், 'சிவ சிவ'' என்று கூறினார்களாம். இதனால் அவர்கள் பாவங்கள் நீங்கியது. அவர்களுக்கு சாப விமோசனம் அளித்தார் ஈசன், என்கிறது புராணம்!

இத்தனை மகிமைகள் கொண்ட சிவராத் திரி விரதத்தை, ஸ்ரீபிரம்மா, ஸ்ரீவிஷ்ணு, ஆதிசேஷன், ஸ்ரீசரஸ்வதி முதலான கடவுளரும் மேற்கொண்டனர். சிவ தரிசனம் செய்து சிவனருளைப் பெற்றனர்!

தொகுப்பு: கீதாராஜன்
போன்: 9444228203



www.aanmeegamalar.com

## கயிலை தரிசனத்திற்கு ஈடான

# அத்ரி மலை தரிசனம்

சித்தர்களால் பெருமை பெற்ற மேற்கு மலைத் தொடரின் ஒரு பகுதிதான் அத்ரி தபோவனம். அத்ரி மாமுனிவரும் அவரின் சீடர்களும் தங்கி அருள்பாலித்த இடம்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தி லிருந்து தென்காசி செல்லும் வழியில், சுமார் 16 கி.மீ. தொலைவிலுள்ளது ஆழ்வார்குறிச்சி. இவ்வூரில் அண்ணாசிலை அருகில் இடப் புறமாகப் பிரியும் சாலையில் சுமார் 13 கி.மீ. தூரம் பயணித்தால், கடனாநதி அணையை அடைய லாம். இங்கிருந்து சிறிது தூரத்தில், மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந் துள்ளது அத்ரி தபோவனம்.

இறையருள் நிறைந்த இந்தத் தலத்துக்கு ஒரு முறை சென்று வந்தால் போதும், நமது கிரக தோஷங்கள் நீங்கும்; வாழ்வில் சந்தோஷம் பெருகும்.

மற்றோர் அபூர்வமான மலை சதுரகிரி. சித்தர்களால் சிறப்பு பெற்ற க்ஷேத்திரம். அருள் மிகு சந்தன மகாலிங்கம், அருள்மிகு சுந்தர மகா லிங்கம் அருளும் சதுரகிரி தரிசனம், வாழ்வில் நல் திருப்பங்களை அளிக்கவல்லது. இந்த க்ஷேத்திரங்களின் வரிசையில் வரும் மிக அற்புதமான தலம்தான் அத்ரி மலை (அத்ரி நாத்).

இந்த தபோவனத்தில், அத்ரி மகரிஷி தன் குடும்பத்தோடு வாசம் செய்வதாக நம்பிக்கை. வடக்கேயுள்ள `கேதார்நாத்' திருத்தலம் போன்று, தெற்கே மகிமைபெற்று திகழ்கிறது அத்ரி நாத் எனப்படும் அத்ரிமலை.

அகத்தியர் பொதிகை மலைக்கு வருவதற்கு முன்பே இந்த பகுதியில் வாழ்ந்தவர் அத்ரி மகரிஷி. சப்த ரிஷிகளில் முதன்மை பெற்றவரான அத்ரி மகரிஷி வாழ்ந்த இடம் என்பதால், இதை `அத்ரி மலை' எனப் போற்றுகிறார்கள்.

இந்த மலைக்கு வந்து வழிபட்டால், அத்ரி, அகத்தியர், கோரக்கர் போன்ற தவசீலர்களின் திருவருளைப் பெறுவதுடன், சிவனாரின் அனுக்கிரகத்தையும் பரிபூரணமாகப் பெறலாம்.

அத்ரி மலையை தரிசிப்பது, கயிலை மலையை தரிசிப்பதற்கு ஒப்பானது என்று சிலிர்ப்புடன் விவரிக்கின்றன ஞானநூல்கள். தீவினைகள் நீங்கவும், வாழ்வில் வளர்ச்சி காணவும், தோஷங்கள் விலகி சந்தோஷம் பெருகவும் இத் தலத்தை நாடி வந்து வழிபட்டுச் செல்கிறார்கள் பக்தர்கள்.













இரண்டு வழிகள்

அத்ரி மலை பயணத்துக்கு இரண்டு வழிகள் உண்டு. மழை இல்லாத காலத்தில் கடனா நீர்த் தேக்கம் வறண்டு கிடக்கும். அப்போது, கடனா நீர்த்தேக்க பகுதியின் உள்ளே உள்ள வழியா கச் செல்லலாம். இந்த வழியில் செல்லும் போது, பயண தூரம் சுமார் 2 கி.மீ. அளவுக்குக் குறையும்.

ஆனால் மழை பெய்து கடனா நதி நீர்த்தேக்கம் நிறைந்து விட்டால், கரையின் வழியே பயணித்து கல்லாற்றை அடைந்து, அங்கிருந்து அத்ரி மலைக்குச் செல்லவேண்டும்.

கல்லாறு, கடனா நதி இரண்டும் ஒன்றே. தன் சீடர் கோரக்கருக்காக கங்கையை இந்த மலைப்பகுதிக்கு வரவழைத் தாராம் அத்ரி மகரிஷி. அந்த நதிக்குக் கருணை நதி என்றும் பெயர் வைத்தாராம். இந்தப் பெயரே பிற்காலத்தில் `கடனா நதி' என்று மருவியதாகச் சொல்கிறார்கள்.

`கல்லாறு' என்ற திருப்பெயர் ஏற்பட்டது எப்படி?

இந்த நதிக்கடியில் கிடக்கும் கற்கள் சில, சிவலிங்க ரூபத்தில் திகழ்கின்றனவாம். அன்பர்கள் பலரும் அவற்றை எடுத்துச்சென்று ஆவுடையில் பிரதிஷ்டை செய்து, சிவ லிங்கமாக வழிபடுகிறார்கள். புனிதமிகு கற்களைக் கொண்ட இந்த நதிக்கு `கல்லாறு' எனும் பெயர் வந்தது இப்படித்தானாம்!

கடனா நதியைக் கடந்து பயணிக்கும்போது, காற்றில் மிதந்து வரும் மூலிகை வாசம், நாசித் துவாரங்களில் நுழைந்து சிந்தையைச் சிலிர்க்கவைக்கும்.

அத்ரி மலைக்குச் செல்லும்போது, பல்வேறு மூலிகைகளைத் தழுவியபடி வரும் காற்றை சுவாசித்தாலே போதும், நம் உடற்பிணிகள் அனைத்தும் நீங்கிவிடும்!

மூலிகைகள் மட்டுமின்றி இரு முக ருத்ராட்ச மணிகளும் இந்த மலைப்பகுதியில் கிடைக்கின்றன.

`இந்த மலை முழுவதுமே சித்தர்கள் வியாபித்து இருக்கிறார்கள்' என்கிறார்கள் பக்தர்கள். மலைப் பகுதியில் இருக்கும்போது, எச்சில் துப்புவதாக இருந்தாலும் கூட, கை களைத் தட்டி ஓசை எழுப்பிவிட்டே உமிழ்கிறார்கள்.

அத்ரி மலையில் சித்தர் பெரு மக்கள் நிறைந்திருப்பதால், அவர்களின் கவனத்தை ஈர்த்து அனுமதி பெறவே கைத்தட்டி ஓசை எழுப்புகிறார்களாம் அன்பர்கள். ``மலையில் சூட்சுமமாக அமர்ந்து தவம் செய்யும், உலவும் சித்தர்களுக்கு இடைஞ் சல் தராமல், அடியெடுத்து வைப்பதிலும்கூட கவனமாக இருப்போம்" என்கிறார்கள் பக்தர்கள்.

அத்ரிமலைக்குச் செல்லும் வழியில் கடனா நதியைக் கடந்து மலைக்குச் செல்லும் வழியில், கோரக்கர் குகையை தரிசிக்கலாம்.

சதுரகிரி மலையிலும் கோரக்கர் குகை இருக்கிறது. ஆனால், இங்கே அத்ரி மலையிலுள்ள கோரக்கர் குகைச் சுவர்கள் வித்தியாசமாக சுண்ணாம்புப் பாறைபோன்று காட்சி யளிக்கின்றன. விபூதியைக் கொட்டிவைத்தது போன்றும் தெரிகிறது. சாம்பலாக விபூதியில் கோரக்கர் பிறந்ததை நினைவூட்டும் வகையில், இங்கே அவர் தவம் செய்த குகையும் இப்படி விபூதி பூசியது போன்று திகழ்கிறது?!

போகர்பிரான், பழநியில் அருளும் நவ பாஷாண முருகன் சிலையை உருவாக்கிய இடம் அத்ரி மலையே என்றும் சிலர் சொல்கிறார்கள். அந்த விக்கிரகத்தை உருவாக்கிய பிறகு, மீதமான ஔஷதங்களே இங்கே மூலிகைப் பாறையாகத்





திகழ்கிறது என்ற நம்பிக்கையும் உண்டு.

சடமலை மகான்

கோரக்கர் குகைக்கு முன்னதாக, ஒரு குகை ஸ்தலம் உள்ளது. சடமலை மகான் என்கிறார்கள். அத்ரி மலைக்கு சடைமலை என்றும் பெயர் உண்டு. கேரள மாநிலத்திலிருந்து அத்ரி மலைப் பகுதிக்கு வந்த இந்த மகான், இங்கு அவர் தங்கியிருந்த குகையிலிருந்து மண்ணெடுத்துக் கொடுத்து, அன்பர்களின் நோய் தீர்த்து வந்தாராம். பிணிகள் நீங்கியதோடு, அவரின் அருளால் விவசாயம், வியாபாரம் செழித்தன மக்கள் வாழ்வும் சிறப்புற்றதாம். இன்றைக்கும் அத்ரி மலைக்கு வரும் அன்பர்கள் இந்த மகானின் குகைக்கும் வந்து வழிபட்டுச் செல்கிறார்கள்.

இந்த மகானின் குகையையும், கோரக்கர் குகையையும் தரிசித்த பிறகு, அங்கிருந்து சிறிது தூரம் நடந்தால் போதும், அத்ரி மலையின் பிரதானமான திருக்கோயிலை அடைந்துவிடலாம்.

கோயில் அமைந்திருக்கும் அந்த இடத்தையே அத்ரி தபோவனம் என்கிறார்கள் பக்தர்கள்.

அத்ரி தபோவனத்தில் நுழையும் அன்பர்கள், முதலில் தரிசிப்பது, அருள்மிகு வனதுர்கையையே!

இந்தப் பகுதியின் காவல் தெய்வம் இந்த துர்கை. அன்பர்கள் பலர் வழிபாட்டின் பொருட்டு அத்ரி தபோவனத்தில் இரவில் தங்குவது வழக்கம். அப்படிச் சிலர், ஒருமுறை இரவில் இங்கு வரும்போது, கடனாநதியை கடந் ததுமே `ஜல் ஜல்' எனும் கொலுசு ஒலியைக் கேட்டார்களாம். மலைக்குமேல் கோயிலை அடையும்வரை, தொடர்ந்து ஒலித்ததாம் கொலுசுச் சத்தம். பின்னர், பெரியவர்கள் மூலம் அம்பிகையே தங்களுக்குப் பாது காவலாக வந்ததை அறிந்து சிலிர்த்தார்களாம்.

மலைக்கு வரும் அன்பர்கள், வழிபாடு முடிந்து திரும்பி கடனா நதியைக் கடந்து செல்லும்வரை, அவர்களுக்குப் பாதுகாப்பாக நின்று அருள்பாலிப்பவள் இந்த வனதுர்கை என்பது பக்தர்களின் நம்பிக்கை.

தீர்க்கமான கண்கள், சிரித்த முகத்துக்கு சொந்தக்காரி. பக்தர் கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வடிவத்தில் அவளை அலங்கரித்து




வனதுர்கை

வணங்குகிறார்கள். துர்கை என்றாலே கோட்டம் என்று பொருள். கோட்டம் என்பதற்குக் `காவல்' என்று அர்த்தம். ஆக, இவளின் பெயரில்... அதாவது, கோட்டையப்பன், கோட்டையம்மாள் என்று குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி மகிழ்கிறார்கள். இந்த வன துர்கையை வணங்கினால் வெற்றி கிடைக்கும் என்பது ஐதீகம்.

அத்ரி தபோவனத்தில் திகழும் ஆலயம், அவரின் பெயரால் அழைக் கப்படாமல், கோரக்கரின் பெயரிலேயே அழைக்கப்படுகிறது.

சதுரகிரியில் தவம் செய்து வழி பட்டுக்கொண்டிருந்த கோரக்கருக்கு, அத்ரி மகரிஷியைக் காணவேண்டும் அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்று தீராத ஆவல்.




எனவே, விரைவில் அத்ரி மலைக்குப் புறப்பட்டுவிட்டார். அத்ரி மலையின் அடிவாரத்தை அடைந்தவர், கடனா நதிக்கு சற்று கீழ்புறமாக அமர்ந்து தவம் செய்ய ஆரம்பித்துவிட்டார். அதன் பலனாக அவருக்குச் சிவசைலம் ஈசனின் தரிசனம் கிடைத்தது. அவரைக் கண்டதும் ஆனந்தக் கூத்தாடினார் கோரக்கர். தான் தேடி வந்த குருநாதர் அத்ரி மகரிஷி அவர்தான் என்று நினைத்து வணங்கி நின்றார்.

அப்போது சிவனார், "நான் சிவசைலநாதன். நீ தேடி வந்த அத்ரி மகரிஷி, அதோ தெரிகிறதே... அந்த மலையிலுள்ள தபோ வனத்தில் இருக்கிறார்" என்று வழிகாட்டி அனுப்பிவைத்தார்.

சிவனாரின் வழிகாட்டல்படி அத்ரி மலைக்கு மேல் சென்று அத்ரி மகரிஷியைச் சந்தித்தார் கோரக்கர். அதன் பிறகு, அத்ரி மகரிஷிக்கான பணிவிடைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

ஒருமுறை, பூஜைக்காக மலர்கள் பறிக்கச் சென்றார் கோரக்கர். அப்போது, அத்ரி தபோவனத் தின் கிழக்கே மீண்டும் அவருக்குச் சிவசைல நாதரின் தரிசனம் கிடைத்தது. இறைவனின் தரிசனத்தால் மெய்ம்மறந்த கோரக்கர், அந்த இறைவனை எப்போதும் தரிசித்துக் கொண்டே யிருக்க வேண்டும் என்று விரும்பினார்.

தனது விருப்பத்தை அத்ரி மகரிஷியிடம் தெரிவித்தார். சீடரின் மேலான அசையை குருநாதர் நிராகரிப்பாரா? உடனடியாக, அருள் மிகு சிவசைல நாதரை அத்ரி தபோ வனத்தில் பிரதிஷ்டை செய்தார். அப்படி அவர் பிரதிஷ்டை செய்த சிவனார் அத்ரி பரமேஸ்வரர் என்றும், அவருக்கான அம்பிகை அத்ரி பரமேஸ்வரி என்றும் திருப்பெயர் பெற்றனர். ஆனால் கோயிலுக்கு, `கோரக்கர் ஆலயம்' என்றே திருப்பெயர் சூட்டினார்.

திருக்கோயிலை வலம் வர துவங்கினால், இடது புறம் இரட்டை விநாயகர்கள் உள்ளனர். தொடரும் வலத்தில், மகிஷாசுரவர்த்தினி, அத்ரி, அகத் தியர் ஆகியோரை தரிசிக்கலாம். கோயிலின் தென்புறச் சுவரில் தட்சிணாமூர்த்தி, கோயிலின் பின்புறத்தில் பிரம்மா ஆகியோர் அருள்கின்றனர். வடக்குப் புறச் சுவரில் விஷ்ணு அருள்கிறார். அவருக்கு எதிர்புறம் சாஸ்தா அருள்பாலிக்கிறார்.

இந்த தெய்வங்களையெல்லாம் வணங்கி வழிபட்டுவிட்டு, மீண்டும் கோயிலின்முன் வந்தால் தேவியருடன் அருளும் முருகனை தரிசிக்க லாம். கருவறைக்கு எதிரில் நந்தி; இருபுறமும் முருகன், விநாயகர். அவர்களை வணங்கி விட்டு கருவறையைத் தரிசிக்கச் செல்லலாம். கரு வறையில் சிவசக்தி அம்சமாக இரண்டு லிங்க மூர்த்தங்கள். ஒன்று ஈஸ்வரன்; எண்பட்டை பாணத்துடன் திகழும் மற்றொன்று அம்பாளின் அம்சமாம் (மேல் உள்ள படத்தில்).

வெளியூர் பக்தர்கள் தென்காசியில் முதல் நாள் வந்து தங்கியிருந்து, மறுநாள் அதிகாலையில் ஆழ்வார் குறிச்சிக்கு வந்து செல்வது நன்று.

வனப்பிரதேசம் பாதுகாக்கபட வேண்டும். எனவே, தரிசிக்கச் செல்லும் அன்பர்கள், பிளாஸ்டிக் பொருள்களைத் தவிர்க்க வேண்டும். பூஜை போன்ற பொருள்களை துணிப்பையில் கொண்டு செல்லவேண்டும்.

மதிய உணவை கையில் வைத்துக் கொள்வது அவசியம். இரவில் தங்குவது கடினம்.

தனியாகச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். புதியவர்கள், தகுந்த வழிகாட்டிகளுடனும் அனுபவசாலிகளுடனும் பயணத்தை மேற்கொள்வது அவசியம்.

– அகல்விளக்கு அறக்கட்டளை
போன்: 9894099274

# சிவ உபாசனையின் மஹிமையும் அதன் சாஸ்திரமும்

சிவனென்றால் மங்களமயமான தத்துவம். அவர் சுயம்பு மற்றும் ஸ்வயம்ப்ராகாஸமாய் இருப்ப தோடு உலகத்தையும் ஒளிமயமாக்குவதால் அவரே பரபிரம்மம் ஆகிறார். சிவனின் அருளை பெற பக்தர்கள் மகாசிவராத்திரி அன்று சிரத்தையோடு உபாசனை செய்கின்றனர்.

ஆன்மீக சாஸ்திரப்படி செய்யப்படும் உபா சனையால் பக்தியுணர்வு பெருகிஅதிக பலன் கிடைக்கின்றது. இப்பயனைப் பெற சிவ உபா சனையின் மஹிமையையும் சாஸ்திரத்தையும் அறிந்துக்கொள்ளளாம். இந்த வருடம் மார்ச் 11 ஆம் தேதி (மாசி 27) மஹா சிவராத்திரி வருகின்றது.

### மஹாசிவராத்திரி விரத வழிமுறை

மஹாசிவராத்திரி அன்று மட்டும் இரவில் ஒரு பகுதியில் சிவன் ஒய்வெடுக்கிறார். அப்பொழுது சிவனின் ஸகுண காரியம் நின்று போய் தியான நிலையிலிருந்து சமாதி நிலைக்கு செல்கிறார். சிவன் சுயஸாதனையில் ஈடுபடும் நேரமிது. இக்காலத்தில் உலகத்திலுள்ள தமோகுணத்தை சிவதத்துவம் ஏற்பதில்லை. அதனால் தமோகுணம் அல்லது தீயசக்திகளின் ஆக்கிரமிப்பு அதிகமாகிறது. இந்த ஆக்கிரமிப்பு நம்மை பாதிக்காமலிருக்க சிவராத்திரி விரதம் இருக்க வேண்டும். அதன் மூலம் நம்முள் சிவதத்துவத்தை அதிகரித்து தமோகுணத்தை நசிக்க முடியும்.



### சிவபூஜையில் சில விதிமுறைகள்

மஞ்சள் மற்றும் குங்குமம் உற்பத்தியின் சின்னம்; சிவன் லயத்தின் அதிதேவதையானதால் சிவனுக்கு இவற்றை அர்ப்பணிக்கக் கூடாது.



ஆவுடையாருக்குசம்பங்கி, ஜாதிமல்லி, குண்டுமல்லிகை, தும்பை போன்ற வெள்ளை மலர்களை, காம்பு ஸ்வாமியை நோக்கி இருக்கு மாறு ஸமர்ப்பிக்க வேண்டும்.

தாழம்பூ, மல்லிகை, ஹீனா, தர்பார் சுகந் தத்தை உடைய ஏதாவது 2 ஊதுபத்திகளை ஏற்றி 3 முறை சுற்ற வேண்டும்.

மஹாசிவராத்திரியன்று சிவதத்துவத்தை ஆகர்ஷித்து வெளியிடக் கூடிய கோலத்தைப் போடவும்!

## நந்தியின் கொம்புகளுக்கிடையே சிவதரிசனம்

சிவலிங்கத்திடமிருந்து அதிக சக்தி வாய்ந்த அதிர்வலைகள் வெளிப்படுவதால், தரிசிப்பவர்களுக்கு உடல் சூடு, தலை பாரம் போன்ற கஷ்டங்கள் ஏற்படலாம். நந்தியின் கொம்புகளுக்கிடையே தரிசனம் செய்வதன் மூலம் தரிசிப்பவர்களின் ஸாத்வீகத் தன்மை அதிகரிப்பதால் இக்கஷ்டங்கள் ஏற்படுவதில்லை.

தரிசன முறை: சிவாலயத்தில் மூன்று கால்களை மடக்கி ஒரு காலை நிமிர்த்தி நந்தி உட்கார்ந்துள்ளார்.

நந்தியின் வலதுபக்கம்நின்று அல்லது உட்கார்ந்து, இடது கையால் நந்தியின் பின்புறத்தைத் தொட்டு வலது கையின் கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரல்களை நந்தியின் கொம்புகளில் வைத்து அந்த இடைவெளியில் சிவலிங்கத்தை தரிசிக்கவும்.

## சிவனுக்கு வில்வார்ப்பணம் ஏன்?

வில்வத்திற்கு சிவதத்துவத்தை ஆகர்ஷிக் கக் கூடிய சக்தி அதிகமானதால், வில்வத்தை அர்ப்பணிக்கின்றனர். காம்பு சிவனை நோக்கியும் வில்வதளம் நம்மை நோக்கி இருக்குமாறு அர்ப்பணிக்கவும்.

## சிவலிங்கத்திற்கு பாதி ப்ரதக்ஷிணம் ஏன்?

சிவலிங்க ப்ரதக்ஷிணம்செய்யும்போது அபிஷேகம் விழும் இடம் வரை சென்று அதைத் தாண்டாமல் மறுபடியும் திரும்பி ப்ரதக்ஷிணத்தை முடிக்க வேண்டும். ஆவுடையாரிலிருந்து வெளிப்படும் சக்தியை சாதாரண மனிதர்களால் தாங்க முடியாததால் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படலாம்; அதனால் சிவலிங்கத்திற்கு பாதி ப்ரதக்ஷிணம்செய்ய வேண்டும்.



## சிவராத்திரியன்று சிவனின் நாமஜபம்

மஹாசிவராத்திரியன்று சிவதத்துவம் மற்ற நாட்களைக் காட்டிலும் 1000 மடங்கு அதிக முள்ளது. அன்று 'ஓம் நமசிவாய' என்ற நாமஜபத்தை அதிக அளவு பக்திபூர்வமாக செய்வதால் வாயுமண்டலத்திலுள்ள சிவதத் துவத்தை அதிகம் க்ரஹிக்க முடிகிறது.

## 'நம சிவாய' மந்திரத்தின் ஆன்மீக அர்த்தம்

ந: அனைத்து லோகங்களுக்கும் அதிபதி

ம: பரம ஞானமளிப்பவர், மஹாபாதகங் களை நசிப்பவர்

சி: மங்களமளிப்பவர், சாந்தம் மற்றும் அனுக்ரஹம் செய்பவர்

வா: நந்திவாஹனர், வாசுகி மற்றும் வாமாங்கி சக்திகளின் சின்னம்

ய: பரமானந்தரூபம், மங்களத்தின் இருப் பிடம்

## சிவனின் விசேஷத் தன்மைகள்

கங்கா எப்படி சூரிய குடும்பத்தில், சூரி யன் நடுநாயகமாக திகழ்கிறதோ அப்படி நம் உடம்பிற்கும் ஆத்மா மூலாதாரமாக விளங்கு கிறது. அதே போல் ஒவ்வொரு பொரு ளின் சைதன்யம் மற்றும் பவித்ரத்தின் நடு மைய மாக 'கங்' விளங்குகிறது. "கங்" கின் உற்பத்தி ஸ்தானம் 'கங்கா'. சிவனுடைய சிரஸி லிருந்து கங் பொழிவதால் கங்கை சிவனுடைய சிரஸி லிருந்து வருகிறது என்பது ஐதீகம்.

சந்திரன் சிவனின் தலையை, சந்திரன் அலங்கரிக்கிறது. நேசம், கருணை, தாயன்பு ஆகிய உணர்ச்சிகளின் பிறப்பிடமாக சந்திரன் திகழ்கிறது. ஆகையால், 'சந்த்ரமா' என்கின்ற நிலை, இம்மூன்று உணர்ச்சிகளையும் ஒருங்கே பெற்றதாகிறது.

நெற்றிக்கண் சிவனின் இடது கண் முதற் கண்ணாகவும், வலது கண் இரண்டாவது கண்ணாகவும், புருவ மத்தி யில் சூட்சமமாக உள்ள நெற்றிக் கண் மூன்றாவது கண்ணாகவும் கரு தப்படுகிறது. மேல் நோக்கி நீண்டிருக்கும் மூன்றாவது கண், மற்ற இரு விழிகளின் கூட்டு சக்தியை பிரதிபலிக்கிறது. தெய் வீக சக்தியின் இருப்பிடமாக திகழ் கிறது. அதற்கு, 'ஜோதிர்மட்' 'வியாசபீட்' என்றும் சில பெயர்கள்

உள்ளன.

நாகம் சிவனின் மற்றொரு பெயர் ‘புஜங்க பதிஹாரி’. ‘புஜங்க’ என்றால் நாகம். அதாவது தூய்மையான பொருள், ‘பதி’ என்றால் பேணி பாதுகாப்பவன், ‘ஹாரி’ என்றால் கழுத்தில் ஹாரத்தை அணிந் திருப்பவன்.இதிலிருந்து புஜங்கபதிஹாரி என்பவன் தூய்மையான பொருளை பேணிபாதுகாத்து, தன் கழுத்தில் மாலை யாக அணிந்து கொள்பவனாகிறான். மேலோட்டமான பார்வைக்கு, அவை நாகங்களாக தெரிந்தாலும், உண்மையில் அவை ஒரு விதமான ஏணிகளாக பயன் படுகின்றன. அவற்றின் வாலைப்பிடித்துக் கொண்டோமேயானால் விரைவில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படும்.

பஸ்மா (விபூதி) எது பிறந்து, முடிவில் சாம்பலாகிறதோ, அதற்கு பஸ்மா என்று பெயர். பூமியிலுள்ள எல்லா உயிர்களும், இந்நெருப்பிலிருந்து பிறந்து, பின்பு நெருப்பிலேயே ஐக்கியமாகின்றன. சரீரம் அழியக்கூடியது. அதனைத் தொடர்ந்து நினைவுறுத்தும் சின்னமே பஸ்மம், என்பதே பஸ்மத்தின் உள்ளர்த்தம்.

ருத்ராக்ஷம் ருத்ரா+அக்ஷ ருத்ராக்ஷா ஆகின்றது. ‘அக்ஷ’ என்றால் ‘கண்’, ருத்ரா+ அக்ஷா என்றால், எது எல்லாவற்றையும்பார்த்து காரியங்களை செய்கின்றதோ அதைக் குறிக் கும் (உதா. மூன்றாவது கண்), அக்ஷாவின் இன் னொரு அர்த்தம் ‘அச்சாணி’.

கண், ஒரு அச்சாணியைக் கொண்டு சுழல்கிறது.அதனால் கண்ணிற்கும் அக்ஷ என்று பெயருண்டு. ருத்ராக்ஷம் பீஜம் ஆகும். அது என்றும் குறைவதில்லை. ஆத்மாவும் அவ்வாறேதான். ‘ருத்ராக்ஷம், ஆத்மாவின் சின்னமாகும்’. ருத்ராக்ஷம் சிவப்பு நிறமாகவும் மீனை போல் தட்டையாகவும் காட்சியளிகிறது. அதில் மஞ்சள் நிறத்தில் கோடுகள் உள்ளன. அதன் ஒரு பக்கத்தில், வாயைப் போன்ற ஒரு பிளவு காணப்படுகிறது, ருத்ராக்ஷம்ஸாத்வீக அதிர்வுகளை க்ரஹிக்கவும், வெளியிடவும் செய்கிறது, உண்மையான ருத்ராக்ஷம்நம் விரல்களால் உணர முடியும். அச்சமயம், அது வெளியிடும் நல்ல அதிர்வுகளை நாம் க்ரஹித்துக் கொள்கிறோம். புலித்தோல் புலி, ( ரஜ, தம குணங்களின் சேர்க்கை), கொடூரத் தன்மையை குறிக்கின்றது. சிவன் இத்தகைய புலியைக் (ரஜதம) கொன்று, தனது ஆசனமாக்கியிருக்கிறார்.

சிவனின் மனித ரூபத்தில் நான்கு விதமான ஆபரணங்கள் உள்ளன





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” முழுவதும் இலவசமாக படிக்க aanmeegamalar.com இணையதளத்தை பார்க்கவும்


டமரு இது சப்தப்ரமத்தைக் குறிக்கின்றது. இதிலிருந்து மூல ஒலியான 52 எழுத்துக்களும், 14 மஹேச்வர சூத்திரங்களும் உருவாயின. இதன் மூலம் வர்ணமாலா உருவானது.பின்னர் ப்ரபஞ்சம் இதிலிருந்து தோன்றியது.

**திரிசூலம் திரிசூலத்தின் மூன்று பிளவுகள் குறிப்பதாவது**

அ. மூன்று குணங்களாகிய சத்வ, ரஜ, தம

ஆ. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற் றுக்கு அடித்தளமாக விளங்குவது.

இ. விருப்பம், ஞானம், செயல்பாடு.

பாசம் (அல்லது) மான் பாசம் என்பது காலபாசத்தைக் குறிக்கிறது. மான் நான்கு வேதங்களை குறிக்கின்றது.

பரசு இது அறியாமையை அடியோடு வேர றுக்கும் சின்னமாக விளங்குகின்றது.

மஹாசிவராத்திரியின் போது சிவதத்துவம் மற்ற நாட்களைக் காட் டிலும் ஆயிரம் மடங்கு அதிக செயல்பாட்டில் உள்ளது.

**சிவனிடம் செய்ய வேண்டிய சில பிராத்தனைகள்**

ஹே மஹாதேவா, உன்னைப்போன்ற வைராக்கியம் என்னிடமும் நிர்மாணம் ஆகட்டும்.

ஹே சிவசங்கரா, தீய சக்திகளின் தாக்குதலிலிருந்து நீ என்னைக் காப்பாற்று, உன்னுடைய நாம ஜபமாகிய பாதுகாப்பு கவசம் எப்பொழுதும் என்னைச் சுற்றி இருக்கட்டும். இதுவே உன் சரணங்களில் நான் செய்யும் பிராத்தனை.

மேலும் விவரங்கலுக்கு
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

# ஆன்மிக உதிரிப்பூக்கள்



- உலகின் முதல் தோன்றிய சிவாலயம் ராமநாதபுரம் மாவட்டம் உத்திரகேசமங்கை யில் மங்களநாதராக ஈசன் உள்ளார். ஆருத்ரா தரிதசனத்தின் போது மரகதபச்சை நடராஜரின் திருமுகம் பூசப்பட்ட சந்தனம் கலையபடும் அன்று லட்சக்கணக்காண பக்தர்கள் தரிசித்து செல்கின்றனர்.
- மனிதஅவதாரம் எடுத்து வனவாசம் செய்து ராவணணை வதம் செய்து வெற்றி பெற்று ராமபிரான் சீதை, லட்சுமணன் அனுமன் ஆகியோர் சிவபூஜைசெய்து வழிபாடுகள் செய்தனர்.
- ராமர் பிரதிஷ்டை செய்து வணங்கிய தால் ராமநாத சுவாமி என திருபெயரில் ராமேசுவரத்தில் உள்ளது.
- சிவ பக்தர் சிவபக்தியுடன் காசியில் இருந்து சிவலிங்கத்துடன் யாத்தி ரையாக வந்த போது ஒய்வு எடுத்து சிவலிங்கம் எடுக்க முயன்றபோது இங்கே தொடர்ந்து பூஜை செய்ய சிவன் உத்தரவு வந்ததால் இன்று சிவகங்கையில் காசிவிஸ்வநாதர் திருகோவில் உள்ளது.
- காசியில் இருந்துவந்ததால் சிவகங்கை எனவும் இங்கு கங்கையா மிகபெரிய தெப்பம் உள்ளது. நதி ஏதும் கிடை யாது.
- சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வைகை கரையில் உள்ள சோமநாதர் கோவிலில் தல விருஷ்சமாக சிவனின் அம்சமாக அதிக அளவில் வில்வ மரங்கள் உள்ளது.வில்வ வனம் சேத்திரம் எனவும் அழைக்கப்படுகிறது.
- மானாச சஞ்சரரே என பாடிய சதாசிவபிரம்மேந்திரால் ஜீவசமாதி அடைந்த இடமாக மானாமதுரை ஆனந்த வல்லி சோமநாதர் திருக்கோவில் உள்ளது. சந்திர பகவான்சாபம்நீங்கி சிவபூஜைசெய்ததலம் ஆகும்.
- தென்மாவட்டங்களில் சிவனை கங்கை நீரால் பக்த்தர்களே அபிசேகம் செய்து தொட்டு வழிபடும் காசி சிவன்கோவில் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ளது.
- அஸ்திபூவாகமாறிய இடமாக திருப்புவனம் உள்ளது.இங்குபுஸ்பணே ஸ்வரர்எனதிருப்பெயரில் உள்ளது. மதுரை ராமேசுவரம் சாலையில் திருப்பூவனம்உள்ளது.
- திருவிளையாடல் புராணத்தில் கருங்குருவிக்கு சிவன் மோட்சம் அளித்த தலமாக மதுரை ராமேசுவம் சாலையில் மேலெபெருங்கரை எனும் இடத்தில் அட்டாள சொக்கநாதர் என்ற சுயம்பு லிங்க வடிவில் கோவில் உள்ளது.
- மதுரையில் முக்தி கிடைக்கும் கோவிலாக தெப்பகுளம் முன்பு முக்தீஸ்வரர் சிவலாயம் உள்ளது.
- மலையே சிவணாக திருவண்ணாமலை உள்ளது. மலை சுற்றி அஷ்ட லிங்கத் களுக்கும் கோவில் இங்கு மட்டுமே உள்ளது.
- உலகிலேயே அதிகளவில் சிவாலயங்கள் தமிழகத்தில் மட்டுமே உள்ளது.
- குற்றாலத்தில் மட்டும் சிவனுக்கு வெண்ணீர் அபிஷேகம் செய்யப்பட்டு வருகிறது.



அழகுராஜா

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994162192

# ஆன்மீக வழியில் அமைதி

ஒரு பொருளினால் மனிதன் அடையும் இன்பத்தை மகிழ்ச்சியைப் பற்றி சிந்தித்துப் பார்த்தால், ஏதாவது ஒரு துன்பம் கலந்த நிலையில்தான் மகிழ்ச்சி ஆனந்தம் மனித வாழ்க்கையில் இருக்கிறது. ஒருவர் நல்ல வசதியான வீட்டை வங்கியின் மூலம் கடன் பெற்று வாங்குகிறார். அந்த வசதியான புதுவீட்டினை வாங்குவதன் மூலம் அவர் ஆனந்தமடைகிறார். அதில் எந்தவிதமான மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் வீடு வாங்குவதன் மூலம் வங்கியில் அவர் கணக்கிலிருந்து ஒரு கணிசமான தொகை மாதந் தோறும் குறைந்து விடுகிறது.



அதனால் அவர் மனம் அவரையும் அறியாமல் வங்கியில் தமது கணக்கில் பணம் குறைந்து விட்டதே என்று இயல்பாகவே வருந்துகிறது. அவர் வீடு வாங்கும்போது அவருக்கு கிடைத்த மகிழ்ச்சியானது வங்கி யில் அவர் கணக்கில் இருப்புப் பணம் குறைந்தவுடன் அவருடைய மனம் அவரையும் அறியாமல் இயல்பாக வருந்துகிறது.



இதன்மூலம் ஒவ்வொரு இன்பத்திலும் மகிழ்ச்சியிலும் துன்பமும் கலந்தே இருக்கிறது என்பதை இதன்மூலம் உணர்ந்து கொள்ளலாம். இதனை நாம் உணர்ந்து கொள்வதற்கு ஆன்மிகம் கதைகள் பாடல்கள் மற்றும் மனப்பயிற்சி மூலமாக வழி காட்டுகிறது. மனித வாழ்வில் ஆனந்தம் கூடாது என்று ஆன்மிகம் கூறவில்லை. அப்படி ஆனந்தம் கொள்வதில் தாமரையிலைத் தண்ணீர்போல் இருக்க வேண்டும் என்றுதான் கூறுகிறது.

ஒருவர் விலை உயர்ந்த சொகுசான தேக்குமரக் கட்டில் மெத்தை வாங்குகிறார். கட்டில் மெத்தை வாங்கியது அவருக்கு மிக்க மகிழ்ச்சிதான் அதில் எவ்விதச் சந்தேகம் இல்லை. அந்த மகிழ்ச்சி தான் வாங்கிய கட்டி லையும் மெத்தையையும் பாதுகாக்கவேண்டும் என்ற கவலை அவருக்கு இயல்பாக வந்து விடுகிறது. அவற்றின் விலையைபற்றி அவரையும் அறியாமல் ஏதோவொரு சூழ்நிலையில் நினைத்து விடும்போது, அவருக்கு தூக்கம்கூட அப்போது தொலைந்து விடுகிறது. இதனை நாம் ஒரு கோணத்தில் எண்ணிப்பார்த்தால்,அவர் தன்னோட தூக்கத்தைவிற்று, அந்த விலை உயர்ந்த கட்டில், சொகுசான மெத்தையை வாங்கி இருக் கிறார் என்றுதான் கூறவேண்டும்.

எனவே உலகில் ஒவ்வொரு பொருள்களின் மூலம்நமக்கு கிடைக்கக் கூடிய ஆனந்தம் மகிழ்ச்சி சுகமும்,அந்த ஆனந்தத்தோடு மகிழ்ச்சி யோடு நம்மையும் அறியாமல் ஒரு துன்பம் துயரமும் அத னுடன் சேர்ந்தே வருகிறது என்பதை உணரலாம்.

ஒரு விளையாட்டு வீரனுக்கு நன்கு விளையாடியதால் உலக அளவில் பேரும்புகழும் கிடைக்கிறது. அதனால் அந்த விளையாட்டு வீரருக்கு ஒருவிதமான இன்பம் மகிழ்ச்சி ஆனந்தம் கிடைக்கிறது. ஆனால் அந்த வீரன் அடைந்த பேரும்புகழுக்கும் கிடைப்பதற்கு முன்பு தன்னோட உடலையும் உள்ளத்தையும் மிகவும் வருத்தி பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

அதனால் உடலும் உள்ள மும் அப்போது கஷ்டத்தினால் வருந்துகிறது. இதிலிருந்து நாம் ஒன்றை உணரவேண்டும். மனிதர்களுடைய வாழ்க்கையில் துன்பமும் இன்பமும் கலந்தே காணப் படுகிறது. மனிதன் உலகில் ஒரு சுகத்தை அடையும்போது அந்த சுகத்தின் மூலம் ஏதோ ஒன்றை நம்மை அறியாமல் இழந்து விடுகிறோம். எனவே வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்தது என்று நாம் மனபக்குவம் பெற்றுவிட்டால், மனம் கலக்கம் அடைவதில்லை. இதையெல்லாம் எண்ணிப்பார்த்து நிரந்தரமான ஆனந்தம் மகிழ்ச்சி கிடைப்பதற்கு ஆன்மீக வழியில் நாம் முயற்சி செய்து செயல்படும்போது, நாம் விரும்பும் தேடும் மனஅமைதி கிடைக்கும்.

ஒருவர் பட்டிமன்றத்தில் பேசுவதில் சிறந்த

பேச்சாளராக இருக்கிறார். அதனால் அவருக்குப் பணமும் பேரும்புகழும் கிடைக்கிறது. அதனால் தனக்குக் கிடைத்த பேரும்புகழையும் பணத்தையும் நினைத்து அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார். அவர் தன்னோட மகிழ்ச்சியை பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போதெல்லாம் ஒருவிதமான இன்பத்தை அடைகிறார். அவர் தன்னோட குடும்பத்தாரிடம் சேர்ந்து பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சியை அவரையும் அறியாமல் அவர் பட்டிமன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது இழந்து கொண்டிருக்கிறார்.

அதனால் அவருடைய மனம் அவரையும் அறியாமல் தனக்குள்ளே சிறிது வருந்துகிறது. இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது என்றால் ஒரு இன்பத்தை அடையும்போது நம்மையும் அறியாமல் ஒரு துக்கத்தை உணருகிறோம் அல்லது ஏதோ ஒன்றினை இழக்கிறோம்.

எனவே வாழ்க்கையில் ஒன்றை அடையும்போது ஒன்றை நம்மையும் அறியாமல் இழந்து விடுகிறோம் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். நமக்கு துன்பம் வரும்போதெல்லாம் இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து மன ஆறுதல் பெற்று கவலையில்லாமல் மனஅமைதி அடையலாம் என்று ஆன்மிகம் வழி காட்டுகிறது. மேலும் அது நிரந்தரமான ஆனந்தம் மகிழ்ச்சி சுகம் எது என்று ஆன்மிகம் வழிகாட்டுகிறது. அந்த வழியினை ஆன்மிகம் மூலம் அறிந்து மனஅமைதி கிடைப்பதற்கு முயற்சி செய்து, நாம் செயல்களில் ஈடுபடும்போது, நாம் விரும்பும் தேடும் மனஅமைதி கிடைக்கும்.

பொதுவாக மனிதன் ஒரு பொருளை அடைவதன் மூலம் கிடைக்கும் ஆனந்தம் இன்பம் மகிழ்ச்சி அவனுக்கு தொடர்ந்து கிடைக்குமானால் அந்தப் பொருளுக்கும் அந்த பொருள் மூலம் வரக்கூடிய இன்பத்துக்கும் மகிழ்ச்சிக்கும் அடிமையாகி விடுகிறான். அதனால் அவன் சுதந்திரத்தினைக்கூட இழந்து விடுகிறான்.. ஒரு பொருள் மூலம் அடையும் இன்பம் மகிழ்ச்சி ஆனந்தம் ஆகியவற்றை சிறுசிறு குறைபாடுகளுடன் நாம் அனுபவிக்கும் ஆனந்தத்தில் இருப்பதையும் பார்க்கலாம்

நமக்கு கிடைக்ககூடிய ஆனந்தம் மகிழ்ச்சி எப்படி இருக்க வேண்டுமெனில், நாம் அடையும் ஆனந்தம் மகிழ்ச்சி நிரந்தரமாக இருக்க வேண்டும். அந்த ஆனந்தம் நமக்கு குறைவில்லாத ஆனந்தமாக இருக்க வேண்டும். அந்த ஆனந்தம் துன்பம் கலவாத ஆனந்தமாக இருக்க வேண்டும். அந்த நித்திய ஆனந்தத்தினைப் நாம் பெறுவதில் சுதந்திரமாக இருக்க வேண்டும். அவ்வாறு


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்


www.aanmeegamalar.com

கிடைக்கும் ஆனந்தத்திற்கு மகிழ்ச் சிக்கு மன தளவில் அடிமையாகாமல் இருக்க வேண்டும். அதற்கு ஆன்மீக வழியில் பயிற்சியை மேற் கொள்ள வேண்டும். நித்தியமான இன்பம் மகிழ்ச்சி ஆனந்தத்தைதான் மோட்சம் வீடு என்று சாஸ்திரங்கள் கூறுகிறது.

ஒரு பொருளை அடையும்போது கிடைக்கும் பாதுகாப்புடன் கூடிய இன்பம், மகிழ்ச்சியானது, நிரந்தரமாக அவனுக்கு இருப்பதில்லை என்பதை நாளடைவில் உணர்ந்து கொள்கிறோம். பொதுவாக மனிதர்கள் ஆனந்தமாக இருக்கும்போது அதில் உள்ள குறைபாடுகளை பற்றி கவனிப்பதில்லை. குறைகளுடன் காணப்படும் மகிழ்ச்சியை ஆனந்தத்தைத்தான் நாம் அடைந்து கொண்டு இருக்கிறோம். ஒரு பொருளை அடைவதால் கிடைக்கும் ஆனந்தம் அதாவது உண்மையான ஆனந்தம் மனஅமைதி எங்கு கிடைக்கும்? எப்படி அதனை அடையலாம்? என்பதை ஆன்மிகம் வழி காட்டுகிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

நாம் நிரந்தரமான இன்பம் என நினைத்து, நிலையில்லாத இன்பத்தில் அழுந்திக் கிடக்கிறோம். இதனை ஆன்மிகம் மாயை என்று கூறுகிறது. மனிதன் ஒரு பொருளை அடையும்போது அதன் மூலம் கிடைக்கும் இன்பத்தில் இருக்கும்போது அதில் உள்ள குறைகளை அவனது மனம் எண்ணிப் பார்ப்பதில்லை. அவன் குறைகளுடன் கூடிய இன்பத்தையே அவன் நிரந்தரமானது என்று எண்ணி அதிலேயே மூழ்கி விடுகிறான். அதனால் அவன் நிரந்தரமான இன்பம் தரக்கூடிய மோட்சத்தினை அவன் அடைய முடியாமல் தவிக்கின்றான். உலகில் உள்ள இன்பங்களை அதாவது உலகில் ஒரு பொருள் மூலம் கிடைக்கக்கூடிய இன்பம் நிரந்தரமானது என்று மனம் எண்ணிக்கொண்டு ஒருவித மயக்கத்தில் அந்த இன்பத்திலே மூழ்கி விடுகிறது. நிரந்தரமான இன்பம் தரக்கூடிய மோட்சம் பற்றி மனஅமைதி கிடைப்பது பற்றி நமது மனம் எண்ணுவதில்லை.

எடுத்துக்காட்டாக ஒரு முதியோர் இல்லத் தினை நடத்துபவர் கூறியதை பற்றிக் கேளுங்கள். அதனைப்பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நல்ல வசதியான நிலையில் இருக்கும் பெற்ற மகன்களே தங்கள் தாய் தந்தையை வயதாகி விட்டது என்ற காரணத்தினால் வெறுப்புடன் முதியோர் இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்து விட்டு செல்கிறார்கள். அந்த முதியோர்களும் ஆரம்பத்தில் முதியோர் இல்லத்தில், தங்களுக்கு தாங்கள் விரும்பும் மனஅமைதி கிடைக்கும் என்ற எண்ணத்தில் வந்து விடுகிறார்கள். அந்த முதியோர்கள் முதியோர் இல்லத்தில் வந்த பிறகும் மன வைராக்கியத்துடன் இருப்பதில்லை. அங்கு வந்து சேர்ந்த சில மாதங்களில் அந்த முதியோர்கள் தன்னோட மகன் மருமகள் பேரன் பேத்தி இவர்களையெல்லாம் பார்க்கவேண்டும் என்றும், முதியோர் இல்லத்தை விட்டு போக வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள். காரணம்...




(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

www.aanmeegamalar.com

aanmeegamalar mail book (BI MONTHLY) R.Dis No:1068/2020

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.



தொடர்பு கொள்ள வேண்டிய எண்:

# 9444228203

aanmeegamalar